

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கீழறை ஆண்டு கடக நல்லோரை ஆடித் திங்கள் 7ம் நாள் (23-07-2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739

## நம்பியாரூரர் குருபூசை



ஆடித் திங்கள் 29ம் நாள், விளக்கு/சோதி நாண்மீன் (நட்சத்திரத்தில்) (14 ஆகஸ்ட்) நம்பியாரூரர் (சுந்தரர்) குரு பூசை தென்னாட்டில் கொண் டாடப்படும்.

# தமிழர் மரபுவழி தென்புலத்தார் எனப்படும் நீத்தார் வழிபாட்டில்

# ஆடி மறைமதி (அமாவாசை) இம்முறை ஆடி 23 (ஆகஸ்ட் 8)

## தந்தையை இழந்தவர்கள் கண்டிப்பாகப் பிடிக்கவேண்டிய விரதம்

தமிழர் மரபிலே தொன்றுதொட்டு மூத்தோர் வழிபாடுகள் மற்றும் நீத்தார் வழிபாடுகள் இரண்டறக் கலந்தவை ஆகும். பொதுவாக எல்லா மறைமதி (அமா வாசை) தினங்களும் விரதத்திற்குரிய நாட்களாயினும் தை, ஆடி, மற்றும் புரட்டாதி மறைமதி (அமாவாசை) தினங்கள் தென்புலத்தார் பிதிர் வழிபாட்டிற்கு மிகவும் உகந்தவை.

குறிப்பாக ஆடி மறைமதி அன்று தந்தையை, கணவன் மற்றும் ஆண் பிள்ளைகளை இழந்தவர்கள் நோன்பிருந்து மனம், மொழி, மெய்களால் வினைகளை அறுத்து வீடு பேறு வழங்கும் ஒரேயொரு கடவுளாகிய சிவபெருமானை வழிபட்டு உங்கள் தந்தைக்கும், முன்னோருக்கும் மீண்டும் பிறப்பில்லாத பேரின்பப் பெருவாழ்வு கிடைக்கவேண்டு மென்று விண்ணப்பம் வைத்து நெய் விளக்கேற்றி வழிபட வேண்டும். ஏற்கனவே அவர்கள் பிறப்பினை எடுத்திருந் தால் இப்பூவுலக வாழ்வில் வாழ்வாங்கு வாழ்வதற்கு பொருளும், பிணிகள் அற்ற வாழ்வும் பின்னர் அருளும் வழங்கி பிறவிப்பிணியையும் நீக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுங்கள்.

இத்தினத்திலே அதிகாலை எழுந்து புனித தீர்த்தங் களில் அல்லது கிணற்றடி நீரில் நீராடி, சிவனை வழி பட்டு, மூத்தோரின், தந்தையின் படம் வைத்து , நெய் விளக்கேற்றி அவர்களுக்கு எள்ளும் தண்ணியும் இறைத்து பிதிர் வழிபாடு ஆற்றி, பலவகையான மரக்கறிகளுடன் நிறைவான அறுசுவை உணவுகளை வீட்டில் தாயார் செய்து, சிவனுக்கும் அவர்களுக்கும் படையல் செய்து சிவபுராணம் பாடி, பிற உயிர்களுக்கு உணவளித்து, அன்ன தானம் இட்டு, நீங்களும் குடும்பமாக இருந்து உண வினை உட்கொண்டு நிறைவு செய்யலாம். நீத்தாருக்கு முத்தி வேண்டி அச்சோப் பதிகத்தினையும் படியுங்கள்.

**மணிவாசகரின் திருவாசகம் - அச்சோப் பதிகம்**

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறு யார்பெறுவார் அச்சோவே**



கன்னியா இராவண தீர்த்தம் - திரிகோணமலை




இராமேசுவரம் 22 புனித தீர்த்தங்கள் - தமிழ்நாடு



கங்கை - காசி / வாரணாசி



கீரிமலைத் தீர்த்தம் - யாழ்ப்பாணம்

# ஆனி உத்தரம் ஆடல்வல்லானின் அருள்நீர் அருட்காட்சிகள்



உத்தரகோசமங்கை
இராமநாதபுரம்



வட்டுக்கோட்டை அருள்மிகு விசாலாட்சி உடனுறை
காசிவிசுவநாதர் கோயில் - யாழ்ப்பாணம்




வழுதரெட்டி
விழுப்புரம்



நல்லூர் சிவன் கோயில்
யாழ்ப்பாணம்

# சைவத்தின் திருவாய் வந்த திருவாதவூரடிகள்



சிவத்திரு. செந்தமிழாதன்

ஆதியும் அந்தமும் இல்லா, இறைவனால் திருத்தொண்டர்கள் சிறப்பு பெற்ற வரலாறு, பெரியபுராணம் எங்கும் நிறைந்து நீள்கிறது. அவன் திருவருட்கருணையாலும், தொண்டர்களின் தூ ய அன்பினாலும், ஒரு மிகப் பெரிய பத்தி மரபு சைவத்தின் அரணாக அமைந்து சிறந்தது. இறைவனின் பேரின்ப ஆற்றில் மிதந்து முத்தியின்பம் அடைந்து தொண்டர்கள் வானுறையும் கடவுளர்களாக மாறிப்போயினர். ஆனால் இந்த வழமையில் இருந்து மாறாக, ஒரு அடியவரால் இறைவனே தனித்தன்மை வாய்ந்த சிறப்புப் பெற்றான் என்றால் அது திருவாதவூரடிகளையே சாரும்! ‘விடையேறியோர் தூவெண் மதி சூடிய’ இறைவனை ‘பரியேறிய நாதனாக’, பத்தர்களுக்குக் காட்சி தர வைத்த பெரும்பேறு பெற்றவரே, திருவாதவூரடிகளென்னும் மணிவாசகர்!

பெரியபுராணத்தில் எந்தக் குறிப்புக்களும் இல்லாத மணிவாசகரை, காலம் சைவத்தின் கைகளில் சான்றுகளோடு சேர்ப்பித்தது! சைவத்தின் மாண்பு அத்தனைக்கும் சாரமாய் அமைந்த தனிப்பெரும் நூலாகிய திருவாசகத்தை அருளிய மாணிவாசகரிடத்திலே, இறைவனே விரும்பி, திருக்கோவையும் கேட்டு பெற்றுக் கொண்டான் என்கில், இதை விட மணிவாசகர் சிறப்பை வார்த்தைகளில் சொல்லிவிடத்தான் இயலுமா?

“மணிவாசகந்தரு மந்திரமோதினால் பிணி மூப்பில்லாப் பிரம மாகுதும்” என்கிறார், யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள். திருவாசகமே, பிணி மூப்பைக் கெடுக்கும் பெருவாசகம்! அதுவே மறைமொழியாகிய மந்திரம்! மந்திரம் யாது செய்யும்? இறைவனை அழைக்கும்! நிலையின்பம் கொடுக்கும். திருவாசகமோ எம்மை இறைவனுக்குள் இரண்டறக்கலக்க



ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

வைக்கும். வேதங்களதும், உபநிடதங்களதும், தெளிந்த தெளிவாய், பிரம்மமாகிய இறைவனை அனுபவிக்கும் சூக்குமப் பாதையாய் எம் கண்முன் விரிகிறது திருவாசகம். இதனாலே தான், தாயுமான சுவாமிகள் திருவாசகத்தை ‘வேதபாராயணப்பனுவல்’ என்று போற்றுகின்றார்! இதன் பொருளே சிவன் தான்! இதன் தொடக்கமும் முடிவும் சிவனே தான்! இதையே மணிவாசகரும் பொருள்கேட்டவர்களுக்கு, தில்லையம்பலத்துள் புகுந்து இறைவனோடு கலந்து, செம்பொருள் காட்டி தானே விளக்கமாயும் அமைந்தார்!

சைவத்தின் தெளிவு தொண்டு! அது உயர்ந்த ஞானமார்க்கத்தோடு சேரும் போது, அறிவால், கல்வியால் பெற்ற புறப்பொருட்கள் எல்லாம் சிறு புல்லென தெரிந்து நம்மை நீங்கும். அந்த இயல்பு வாய்க்கப் பெற்றதும், இப்பெரிய சைவசமய மார்க்கத்திற்குப் பெரும் பணியாற்ற இறைவனின் பெருங்கருணை வந்து வாய்க்கிறது. அரிமர்த்தன பாண்டியனின், முதல் அமைச்சராக, அந்நாட்டின் உயரிய பட்டமாகிய ‘தென்னவன் பிரமராயன்’ எனும் பெருமையோடு, அரசவையில் வீற்றிருந்த, திருவாதவூரடிகள், குருந்த மரநிழலில் குருவாகிய இறைவனைக் கண்டதும், அந்த நொடியில், அறிவால் வாய்த்த அத்தனையையும் துறந்தார்!

தன் பதவி துறந்தார், பணியை மறந்தார், தன்னை மறந்தார், பரமனின் பாதங்களை தன் தலைமேல் தாங்கும் பேறுபெற்றார்! உள்ளம் கசிந்து உடலும் என்பும் உருகி நின்று ஞானத்தின் தெளிவை, நான் மறையின் முடிவை, சிற்றறிவு உணரமுடியாத சிவனை உற்றறியும் உள்ளன்பு பெற்றார்! ஒரு காதலி காதலனைத் தேடி பிரிவு ஆற்றாமல் புலம்பும் நிலையைப் போலானார். இவ்வுலகத்தவர் இவரை பித்தன் என்றனர்! பெரும் சுகபோக அரசபணி துறந்து, பிச்சை தேவருக்கே அடிமையானால் இவ்வுலகம் ஏசாது என்ன செய்யும் சிற்றறிவில் சிக்குண்ட உலகம் அல்லவா இது.

**“பேசப்பட்டேன் நின் அடியாரில் திருநீறே**
**பூசப்பட்டேன் பூதலரால் உன் அடியான் என்று**
**ஏசப்பட்டேன் இனிப்படுகின்றதுஅமையாததால்**
**ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன் உன் அடியேன்”**

என்று அந்த ஆனந்த பரவசத்தை அவரே பதிவு செய்கின்றார். அறிவில் உயர்ந்தவர்! அந்த அறிவால் புத்தி விரியவில்லை மாறாக மனம் விரிந்தது! விரிந்த மனத்தை இறைவனின் அருட்பார்வையைக் கொண்டு நெக்குருகச் செய்தார்! அந்த உருகிய உள்ளொளி பரப்பிய மனத்தால் பத்தி எனும் வலை பின்னி, சைவமாகிய பெருங்கடலில் விரித்து வைத்தார்! எப்படி விரிக்கும் வலையில் மீன்கள் தாமாக வந்து சிக்கிக் கொள்ளுமோ அப்படி இறைவனும், திருவாசக வலையில் விரும்பிச் சிக்கிக் கொண்டான்!

பத்தி வலையில் விழுந்த இறைவன் மீனைப் போன்றவனா? இல்லவே இல்லை, அவன் தித்திக்கும் தேனைப் போன்றவன்! அனைத்திற்கும் முன்னரே தோன்றிய பழையவன் ! அடிமுடியறியமுடியாத அற்புதன்! சொற்பதங்களைக் கடந்து சிற்றறிவுக்கு எட்டாதவன்! ஆனால் மணிவாசகரைத் தேடிவந்தான்!

**“பரமன் காண்க பழையோன் காண்க**
**பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க**
**அற்புதன் காண்க அநேகன் காண்க**
**சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க**
**சித்தமும் செல்லா சேட்சியன் காண்க**
**பத்தி வலையில் படுவோன் காண்க“**

என்று திருவண்டப் பகுதியில் மணிவாசகர் உருகிப் பாடுகின்றார்! இறைவன் மணிவாசகரை, தேடிவந்தான். பின்னர் தன்னை மணிவாசகரைத் தேட வைத்தான்! அந்தத் தேடலின் பயன், இறைவனையே சிக்கிக் கொள்ளச் செய்யும் பத்தி வலையாகிய திருவாசகம் எமக்குக் கிடைத்தது!

ஆண்டாண்டுகளாய் கடந்தும் இன்றும் எம் கைகளில் அருள் குறையாது வழியும் ஆனந்தப் பெருக்காய் அது நிறைகின்றது! அதைப் பெற மணிவாசகர் பட்டபாடுகள் ஒன்றிரண்டு இல்லை! இறைவன் ஒரு காதலைனைப் போல அவரோடு விளையாடினானன்! பேரின்பத்தின் சாரலை அவருக்கு தூவினான்! ஆனால் அதை நிலைக்கச் செய்யவில்லை! சிற்றனிபம் நிலைத்தால் தானே அது பேரின்பம்! சிலநொடிகளில் மறைந்து போவதும் மறைத்து போகக்கூடிய போகங்களால் வந்து சேர்வதுமாகிய சிற்றின்ப அனுபவமே பேரின்பத்தின் அளவுகோல்! அற்பமானுடர் எல்லோரும் அளவுகோலை எண்ணியே ஆயுள் அழிக்கின்றோம்! ஆனால் மணிவாசகர் அந்த அளவுகோலைப் பற்றி அளவில்லாப் பேரின்பக் கடலாகிய ஆண்டவனைத் தேடினார்.!

குருந்தமர நிழலில் குருவாய் வந்து, நயனதீட்சையும், திருவடிதீட்சையும், உபதேச தீட்சையும் தந்து பேரின்ப வழிக்கு திறவுகோல் தந்த குருநாதரைப் பிரிய மனமின்றிப் பிரிந்து, பாண்டிநாடு போகின்றார்! நரிகளைப் பரிகளாக்கி, தானே அதன் தலைவனுமாகிக் கையில் கோலுடன் வந்தது சிவனே என்று தெளிகின்றார்! ஆனால் மன்னனின் அறியாமையை எண்ணியும் ஆண்டவனின் பேரருளை எண்ணியும் ‘கடை நாயேனாகிய‘ தனக்காக இறைவன் வந்தானே என்று கலக்கம் மிகக் கொள்கின்றார் பின்னரும், திருப்பெருந்துறையில் மீளவும் சென்று குருநாதன் திருத்தாள்களிலேயே, பத்தி பெருகப் பணிசெய்து பேரின்ப அனுபவம் பெறுகின்றார்!

இறைவனோ, அவ்விடம் விட்டு அகன்று, அருகிலிருக்கும் குளத்தில் தோன்றும் சோதியில் கலந்து தன்னையடையுமாறு, மாணவர்களுக்குப் பணித்து, மணிவாசகரை தில்லைக்கு வருமாறு திருவருள் கூர்ந்து கூறி மறைகின்றான்! சோதியும் தோன்றியது, சீடர்கள் எல்லோரும் அதில் கலந்து மகிழ்ந்தனர்! மணிவாசகரோ, கொன்றைமரநிழலில் ஞானயோகத்தில் அமர்ந்திருந்து சோதியுட் கலக்கும் பேற்றினை இழந்து, குருநாதரைத் தேடி உத்தரகோசமங்கைக்கு சென்றார்! அங்கே, **“கடையவனேனைக் கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட விடையவனே விட்டிடுதி கண்டாய்“** என்றும்,

**“இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை என்னின் அல்லால் விருந்தினேனை விட்டிடுதி கண்டாய்“**என்றும்

என்னைக் கைவிட்டுவிடாதே, என்று இறைவனிடத்தில் ஐம்பது பாடல்களால் உலகை நீத்தலின் பொருட்டு விண்ணப்பிக்கின்றார்! இறைவனோ, திருப்பெருந்துறையில் மணிவாசகர் காணத் தவறிய கோலத்தைக் காட்டி, எண்சித்திகளையும் மணிவாசகர் பெறும் வகையில் அருளி மறைந்தார்! அதன் பின்னரும், அற்புதமான மனம் உருகும் திருவாசகப் பதிகங்களை மணிவாசகர் நெக்குருகிப் பாடினார்! அங்கிருந்து சோழவளநாடு சென்று திருவாரூரில் சிவானந்த முதிர்வால், இறைவனைத் திருப்புலம்பல் செய்து பாடுகின்றார்!



சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண்வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமான்

உலக பாசங்கள் எல்லாம் அறுந்தது! இனி உன் அடியே அன்றி வேறேதும் துணையில்லை! கன்றிலா எண்ணிப் பசு கசிந்து அழைப்பது போல உன்னடியையே விரும்பி அழைப்பேனே என்று புலம்பிப் பாடுகின்றார்!

**“உற்றாரையான் வேண்டேன்**
**ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்**
**கற்றாரை யான் வேண்டேன்“**

என்று தன் பற்றற்ற பக்குவ நிலையை இறைவனுக்கு உணர்த்தி இறைஞ்சுகின்றார்! பின்னர் அங்கிருந்தும் நீங்கி, நடுநாட்டை அடைந்து, திருமுதுகுன்றம், திருவெண்ணெய் நல்லூர் முதலிய தலங்களை வணங்கி, திருவண்ணாமலையை அடைந்து, அங்கும் பேரானந்த அனுபவமாகிய, குருந்த மரக்காட்சியை வேண்டிக் கண்டு வணங்கி ஆனந்த வெள்ளத்தில் தத்தளித்தார்! எங்கெல்லாம் யாத்திரை போனாரோ, அந்த அந்த ஊர்களில் வேரோடிப் போயிருந்த நாட்டுப்புறப் பாடல்களின் சாயலிலேயே இறைவனைப் பாடி ஆனந்தமடைந்தார்.

திருவாதவூரடிகள்! திருவண்ணாமலையில், தன்னையும் பெண்ணாகக் கருதி ‘திருவம்மானை‘ பாடினார்! அதிகாலை துயிலெழுப்பி சிவபூசைக்கு அழைக்கும் ‘திருவெம்பாவை‘ பாடினார்! இவ்வாறு வரலாற்றையும் ஆவணப்படுத்தி, திருவண்ணாமலையில் இருந்து இறைவன், ஆணைப்படியே தில்லையை சென்றடைந்தார்! தில்லையில் எம்பெருமானின் திருவருள் வான் கருணையே, மணிவாசகருக்காக காத்திருந்தது! மண்ணும் மக்களும் பத்தி மரபும் பயனுற மணிவாசகர் புரிந்த பணி தில்லையில் இறைவனாலேயே எழுதப்பட்டது.

**“கண்ணப்பன் ஒப்பதுஆர் அன்பு இன்மை கண்டபின்**
**என்னப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருவி**
**வண்ணப் பணிந்து என்னை வாவென்ற வான்கருணைச்**
**சுண்ணப் பொன்நீற்றற்கே செய்றூதாய் கோத்தும்பீ”**

என்று மணிவாசகரே, இறைவனின் வான் கருணைச் சிறப்பை எண்ணி எண்ணிச் சிறுமியரை போல், திருக்கோத்தும்பி பாடி ஆடி மகிழ்ந்தார்! தில்லையில் தான் பெற்ற ஞானத் தெளிவால் புத்தமார்க்கத் துறவிகளை வாதில் வென்று, சைவத்தின் மாண்பை உலகத்தார்க்கு உணர்த்தியது மட்டுமன்றி ஈழநாட்டு அரசனின் ஊமைப் பெண்ணையும் பேசவைத்தார்!

இறைவன் தானே சென்று மணிவாசகரை ஆட்கொண்டது மட்டுமன்றி தானே திருவாகத்தையும் கேட்டு எழுதிக் கொண்டான்! அது மட்டுமா! ‘திருக்கோவையும் பாடுக‘ என்று தமிழை விரும்பிக் கேட்டான்! எவ்வளவு சிறப்பு? எவ்வளவு கருணை? மணிவாசகரின் திருவாசகம் சைவத்தின் ஒப்பற்ற ஊற்று! அருள் வழியும் அமுதசுரபி! சான்றோரும் மேலைநாட்டு அறிஞரும் அருமருந்தாகப் போற்றிய அமுதம்! நாமும் எம் தலைமுறைக்கு மணிவாசகராகிய திருவாதவூரடிகளை சிவனே பொருளாய் அமைந்த திருவாசகத்தையும் கடத்தி மகிழ்வோமாக!

**“போதலர்ந் தேன் சொரியும்**
**வாதவூர் எங்கோமான் வாசகத்தை ஓதிப்**
**பிறவிப் பிணி நீக்கிப் பேரின்ப வெள்ளச்**
**செறிவுக்குள் செல்வர் சிறந்து“**

திருச்சிற்றம்பலம்

## ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம் -

# அருள்மிகு சிவகாமசுந்தரி அம்மன் உடனுறை திருமூலநாதர் திருக்கோயில் சிதம்பரம் (தில்லை)



சிவத்திரு
குமரேசன்
இராஜசிம்மன்

## தேவாரப் பாடல் பெற்ற சிவபுரங்களில் 1 வது திருக்கோயில் (சைவர்களின் முதன்மைக் கோயில்)



இந்த நடராசர் கோயில் அமைந்துள்ள இடமானது உலகின் பூமத்திய இரேகையின் மையைப் பகுதி என்று சொல்லப்படுகிறது. உலக காந்த ஈர்ப்பு விசையின் மையத்தில் தான் இந்த சிதம்பரம் நடராசர் கோயில் அமைத்திருக்கிறது.

### அமைவிடம்: (கடலூர் மாவட்டம் - தமிழ்நாடு)

கடலூர் மாவட்டம் - சென்னையில் இருந்து ரயில் மற்றும் சாலை வழியாக சிதம்பரம் சென்று அடையலாம். சென்னையில் இருந்து சுமார் 240 கி.மி. தொலைவில் சிதம்பரம் இருக்கிறது. காவிரியின் வடகரை சிவத்தலங்களை வழிபட வேண்டுமாயின், சிதம்பரத்தை ஒரு நுழைவாயில் என்று கூட சொல்லலாம்.

### திருத்தலச் சிறப்பு

சங்க இலக்கியமான கலித்தொகையின் முதல் பாடல் சிதம்பரம் நடராசர் துதியாக உள்ளது. எனவே சங்க காலத்துக்கு முன்பே சிதம்பரம் புகழ் பெற்றிருந்தது. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு தல புராணத்தை சிறப்பாக சொல்வார்கள். சிதம்பரம் கோயிலுக்கு புலியூர் புராணம், கோயில் புராணம், சிதம்பரப் புராணம் என்று மூன்று தல புராணங்கள் உள்ளன. நடராசர் கோயிலும், தில்லையம்மன் கோயிலும், இளமையாக்கினார் கோயிலும், திருச்சித்திரக்கூடமும் இங்கு இருப்பதால், இது கோயில் நகரம் என்றும் அழைக்கப் படுகிறது.

இது அப்பர்,சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என நால்வராலும் பாடப் பெற்ற தலமாகும். இது மாணிக்கவாசகர் முத்தி பெற்ற தலமாகும். இத்திருக்கோயில் பூவுலக கைலாயம் என்றும், கைலாயம் என்றும் அறியப்பெறுகிறது. நந்தனார், கணம்புல்லர், திருநீலச் கண்டக் குயவர் ஆகியோரும் தில்லையில் முத்தி பெற்றனர். மனித உடலை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் சிதம்பரம் கோயிலில் ஒன்பது நுழைவு வாயில்களும், மனித உடலில் இருக்கும் 9 வாயில்களை குறிகின்றது. திருநீலகண்ட நாயனார் தோன்றி, வாழ்ந்தபதியும் இதுதான். மூவர் பாடிய தேவாரத் திருவோலைச்சுவடிகளும் இங்குதான் கண்டெடுக்கப்பட்டன.

அம்பாள் இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தியாக் காட்சி தரும் தலம். நடு இரவுக்குப் பின் அனைத்து இலிங்கங்களின் சக்தியும் வந்து சேரும் திருமூலட்டானத் தலமாகும். நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு, இத்தலம் பற்றிய தேவார பாடல்களை தொகுத்தார், திருமுறை கண்ட சோழ மன்னன். இத்தலத்தில் மாணிக்கவாசகர் இலங்கையை சேர்ந்த புத்த மதத்தை பின்பற்றும் மன்னன் ஒருவனின் ஊமை மகளை நடராசரின் அருளால் பேச வைத்து அதிசயம் புரிந்தார். “நிருத்த சபை” ஊர்த்தவ தாண்டவம் செய்தருளிய இடமும் இதுவே. திருஞானசம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணங்களாகக் கண்டது இப்பதியில் தான்.

நடராசர் திருமுன் அருகிலேயே, 108 திவ்விய தேசங்களில் ஒன்றான கோவிந்தராசப் பெருமாள் தலம் இருப்பது, அருமையிலும் அருமை. இத்திருத்தலத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் எனப்படும், ஆயிரம் தூண்கள் கொண்ட மண்டபம், சிற்பக்கலைக்கும், கட்டடக் கலைக்கும் பெயர் பெற்றது. இதை நிபுணர்கள் கட்டடக்கலையின் அற்புதம் என்று புகழ்கின்றனர்.

இறைவன், விராட்புருஷனின் வடிவத்தில், திருவாரூர் மூலாதாரமாகவும், திருவானைக்கா ‘உந்தி’ (கொப்பூழ்) ஆகவும், திருவண்ணாமலை ‘மணிபூரகம்’ (கொப்பூழின் உட்பகுதி) ஆகவும், திருக்காளத்தி ‘கழுத்தாகவும்’, காசி ‘புருவமத்தி’யாகவும், சிதம்பரமானது, ‘இருதயத்தான’ மாகவும் சொல்லப்படுகிறது. ஐம்பூதத் தலங்களில் ஆகாயத்தலமாக விளங்குகின்றது. வழிபட முத்தி தரும் சிறப்புத் தலமாகும். இத்திருத்தலம், ஐந்து சபைகளில் பொற்சபையாக விளங்குகின்றது-.

சிவன் மீது கொண்ட பத்தியால், நந்தனார், கோயிலுக்குள் சென்று, நடராசருடன் இரண்டறக்கலந்தமை, இத்தலத்தின் சிறப்பாகும். மூலவருக்கு திருமஞ்சனப் பூசனை (அபிஷேக ஆராதனை) நிகழும் போது, அவற்றை ஆகாயத்திற்கும் காண்பிக்கும் சிறப்பு வழக்கம் இக்கோயிலில் உண்டு. நடராசர் அமைந்துள்ள கருவறைக்கு மேல் புறத்தில் கிட்டத்தட்ட 21,600 தங்க ஓடுகள் இருக்கின்றது. மேலும் 65,000 தங்க ஆணிகளில் பதிக்கப்பட்டுள்ளது. 21,600 தங்க ஓடுகளானது சராசரியா மனிதனின் ஒரு நாளைக்கு விடுகின்ற மூச்சியின் அளவை குறிக்கின்றது.அதாவது ஒரு நிமிடத்திற்கு 15 என்றால் 15*60*24 என்ற விதத்தில் கணக்கிடப்பட்டு, 21,600 தங்க ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது. 65,000 ஆணிகள் என்பது மனித உடம்பில் உள்ள நாடிகளின் எண்ணிக்கையை குறிக்கிறது.

**இறைவன் திருப்பெயர் :** திருமூலநாதர் (மூலட்டனேசுவரர், சபாநாயகர், கூத்தப்பெருமாள், விடங்கர், மேருவிடங்கர், தட்சிணமேருவிடங்கர், பொன்னம்பலக் கூத்தர், தில்லைவனநாதர், தில்லைநாயகர், தில்லைவாசர், கனகசபை, கனகசபாபதி, கனகரத்தினம், சபாரத்தினம், சபேசர், அம்பலநாதர், அம்பலவாணர், அம்பலத்தரசர், ஆடலரசர், ஆடியபாதம், குஞ்சிதபாதம், நடனசிவம், நடனசபாபதி, நடராசர், நடேசமூர்த்தி, நடேசுவரர், தாண்டவமூர்த்தி, தாண்டவராயர், ஆனந்ததாண்டவர், சிதம்பரநாதர், சிதம்பரேசுவரர்)

**உற்சவர்:** நடராசர் (கனகசபைநாதர்)
**இறைவியார் திருப்பெயர் :** உமையாம்பிகை (சிவகாமசுந்தரி)
**கோயில்மரம் :** தில்லைமரம்
**திருக்குளம் :** சிவகங்கை, பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமேடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல்
**வழிபட்டோர் :** அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், நந்தனார், கணம்புல்லர், திருநீலச் கண்டக் குயவர், நம்பியாண்டார் நம்பி,மாத்யந்தினர் எனும் முனிவர், தேவநாயனார், பதஞ்சலி, வியாக்ரபாத முனிவர், ஆதிசங்கரர், அருணகிரிநாதர்,திருமூலர், எமன், சித்ரகுப்தன்
**பாமாலை:** அப்பர்,சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் (தேவாரம் - 11 திருப்பதிகங்கள், திருவாசகம் - 25 திருப்பதிகங்கள்)

### தலத்தின் மீது நாயன்மார்களால் பாடப்பட்ட பதிகங்கள்

### மாணிக்கவாசகர் அருளியது

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரி யாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

மாறிநின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறை சிவனே

### அப்பர் சுவாமிகள் அருளியது

செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா எறிக்குஞ் சென்னி
நஞ்சடைக் கண்ட னாரைக் காணலா நறவ நாறும்
மஞ்சடை சோலைத் தில்லை மல்குசிற் றம்ப லத்தே
துஞ்சடை இருள் கிழியத் துளங்கெரி யாடு மாறே.

கருநட்ட கண்டனை அண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல் லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே

### சுந்தரர் அருளியது

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ வாழும் நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்


கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரிஅகலுங் கரியபாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே.

### திருத்தல வரலாறு

தமிழகத்தின் மிக பழமையான கோயில்களில் சிதம்பரம் நடராசர் கோயிலும் ஒன்று. இத்தலத்தில் இறைவனான சிவபெருமான் நடராசராகவும், அம்பாள் உமையாம்பிகை மற்றும் திரிபுரசுந்தரி எனவும் அழைக்கப்படுகின்றனர். இக்கோயிலின் மூலவராக சுயம்பாக தோன்றிய திருமூலநாதர் இருந்தாலும், உற்சவர் நடராச பெருமானையே பிரதான மூர்த்தியாக வழிபடப்படுகிறார்.

சிதம்பரத்துக்குப் பெரும்பற்றப்புலியூர் என்ற பெயர் உண்டு. புலிக்கால் முனிவர் வியாக்கிரபாதர் வழிபட்டதால் இதற்குப் புலியூர் என்று பெயர் வந்தது. இந்தக் கோயிலுக்குச் சிதம்பரம் என்று பெயர். “சித் - ஞானம்”, “அம்பரம் - ஆகாசம்”, சித் + அம்பரம் - சிதம்பரம். காலப்போக்கில் அந்த ஊர் பெயர் மறைந்து, கோயில் பெயரே ஊரின் பெயராக மாறிவிட்டது.

சங்க கால தமிழர்கள் கட்டிய சிதம்பரம் கோயில் இப்போது இல்லை. தற்போதுள்ள கோயில் பல்லவ மன்னர்களால் கட்டப்பட்டு, சோழ மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டதாகும். சங்க காலத்துக்கு முன்பு, சிதம்பரம்



கோயில் கடலோரத்தில் இருந்ததாக பாடல்களின் குறிப்பின் மூலம் தெரிகிறது. முகலாயர்கள், ஆங்கிலேயர்கள் படையெடுப்பின் போது, சிதம்பரம் பல தடவை இடித்து நொறுக்கப்பட்டது. என்றாலும் பழமை சிறப்பு மாறாமல் மீண்டும் எழுந்தது. சிதம்பரம் தலம் உருவான போது, பொன்னம்பலம் எனும் கருவறை தென் திசை நோக்கி இருந்ததாம், பல்லவ மன்னர்கள் புதிய கோயில் கட்டிய போது அதை வடதிசை நோக்கி அமைத்து விட்டதாக சொல்கிறார்கள்.

சோழ மன்னர்களின் கட்டுமான திறனை இக்கோயில் பறைசாற்றுகின்றது. பல சோழ மன்னர்கள் எல்லாக்காலங்களிலும், இக்கோயிலை ஆதரித்து வந்துள்ளனர். முதலாம் பராந்தக சோழ மன்னன் 9 ஆம் நூற்றாண்டில் இக்கோயிலின், சிவபெருமானின் திருமுன்னுக்கு “பொன் கூரையை” வேய்ந்தான். பாண்டிய மன்னர்களில் ஒருவரான சுந்தர பாண்டிய மன்னனும் இக்கோயிலின் கிழக்கு கோபுரத்தை கட்டியதாக வரலாறு கூறுகிறது. இராஜேந்திர சோழனின் ஆட்சிக்காலத்தில் “கம்போடியா” நாட்டு அரசன், இக்கோயிலின் இறைவனுக்கு தங்கம் மற்றும் மாணிக்க கற்களை கொண்ட நகைகளை, தனது நாட்டு தூதுவர்கள் மூலம் கொடுத்தனுப்பியதாக கல்வெட்டு குறிப்புக்கள் கூறுகின்றன.

சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர்
SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 - easanaithedi.in.




சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் – சைவ மாணவர் சபை,
(பதிவு–HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org



# பண்பாடு பாயுமா?

உலக மொழிகளில் தமிழை 'முந்து தமிழ்' என்று சிறப்புச் சொல்லி அழைக்கின்றனர். அது, கண்ணுதற் பெருங்கடவுளே, கழகமோடு அமர்ந்து ஆய்ந்தறிந்த மொழி. எனவே காலத்தால் ஞாலத்தில் மூத்த மொழி, அதாவது முன்னரே வந்த மொழி என்பதாலே தான் 'முந்து தமிழ்' என்கின்றனர். ஒரு மொழி இவ்வளவு சிறப்புப் பெறுகிறது என்றால், அந்த மொழியைச் சுமந்து பெற்றிருக்க கூடிய பண்பாடு, அதனிலும் மூத்ததாக, சிறப்பு வாய்ந்ததாக நேர்த்தியாக இருக்க வேண்டும்! அந்த நேர்த்தியும் அழகும் காலகாலமாகத் தொடர்ந்து வந்திருக்க வேண்டும்.

அந்தப் பண்பாடு, விழாக்களையும் சடங்குகளையும், நடைமுறைகளையும் ஏன், அறிவியலையும் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்! அத்தகு பெரும் பொருண்மையும், அழகும் வாய்ந்த பண்பாடே, தமிழர் பண்பாடு!

இது தலைமுறை தாண்டி நிலைக்க வேண்டி, நாம், பண்பாடு அறிந்து ஒழுகுவதும், அதன் அழகியல் கோலங்களைக் கடத்துவதும் நமக்குரிய பெருங்கடமையாகும். ஆனால் சமூக முற்றடக்கமும், இப்பெருந்தொற்றும், ஆண்டுகள் தாண்டி தொடருமேயானால், அந்தப் பண்பாட்டுக்கு கடத்துகையின் உச்சந்தலையில் விழுந்த அடியாகவே அது அமைந்து விடும்!

கூடி வாழ்வதும், சேர்ந்து உழைப்பதும், கலையின்பத்தை ஒன்றாக அனுபவித்து மகிழ்வதும் தமிழரின் கூட்டு வாழ்வியக்கம் எனலாம்! கடந்த தினங்களில் நாம் எந்த ஆர்ப்பாட்டமும் இன்றிக் கடந்துவந்த, 'ஆடிப் பிறப்பு' என்பது, தமிழரின் கூட்டுவாழ்வின் ஒரு மகத்தான பிரதிபலிப்பு என்பதை, அடுத்த தலைமுறைக்கு எப்படிச் சொல்லப்போகின்றோம்? அந்த விளக்கத்தை வரும் தலைமுறை ஏற்றுக் கொள்ள எதைச் சான்றுகாட்டப் போகின்றோம்? இப்படி பல கேள்விகளால், வரலாற்றைத் தக்கவைக்க இயலாமல் போய்விடுமோ என்று மனது அவதிமிகவுறுகிறது!

நிலத்தை உழும் காலம் தான் ஆடி! விவசாய நிலத்தை தயார்படுத்துவதற்காக, விவசாய பெருமக்கள் எல்லோரும் கூடி, ஒருவருக்கு ஒருவர் உதவியாய், ஒருவர் நிலத்தில் ஒருவர் உழைத்துக் கொடுப்பார்கள். அதற்க்கு அதிக உடற்சக்தி தேவை! அதை கொடுக்க. உளுந்தை அரைத்து, கூழாக்கி, நிறையுணவாய், சோர்வைப் போக்கும் வெல்லத்தைச் சேர்த்து செய்த கொழுக்கட்டையும் எல்லோரும் கூடி உண்டு களைப்பை போக்கி மகிழ்வார்கள்.

ஆடி பிறந்து விட்டாலே இதுதான் ஊர்முழுவதும் விழாவாய் நடக்கும்! களைப்பு மறக்க, விளையாட்டுகளிலும் ஈடுபடுவர். இந்தப் பண்பாடு பிற்காலங்களில் ஒரு நாளாய், ஆடி முதல் நாளாய் சுருங்கியது. இன்று ஊர் கூடமுடிய காரணத்தால், அதுவும் மெல்ல மறந்து போகிறது. முன்னரெல்லாம் ஆடிக் கூழ் குடித்து, ஆடிப்பாடிய இளையவர்கள் இன்று, கைப்பேசிகளுக்குள்ளும், கணணிகளுக்குள்ளும் முடங்கிக் கிடந்து, சினிமா மோகத்தால் திரைநாயகர்களை வியந்து போற்றும் அவலநிலையை எப்படிச் சொல்வது?

இரண்டு ஆண்டுகளாய் தொடரும், பெருந்தொதொற்றால், எம் பண்பாடு தொலைந்து போகாமல் பாதுகாக்க இளையவர்கள் முன் வரவேண்டும்! தம்மை மூடியிருக்கும், பொய்மாயப் பெருந்திரைகளை கிழித்து, புத்தொளி வீசும், புதிய சிந்தனைகளால், எம் பழைமையைக் காத்திட அணிஅணியாய் இளையவர்கள் எழுந்தால், எந்த அந்நிய விசையும் எம்மை எதுவும் செய்யாது என்பதை உணர்வோம்!

சங்குப்பிட்டி பாலத்தின் அருகிலே வளர்ந்த அரசமரத்தடியில், பிள்ளையாரை வைத்து, இப்போது சில இளையவர்கள் பொங்கலிடுவதையும் காண்கின்றோம்! இது மகிழ்ச்சி தரும் மாற்றமேயாகும்! இந்த மாற்றம், எதிர்காலத்திலும் தொடர வேண்டும், அது செம்மலை நீராவியடி பிள்ளையார் கோயில் தொடக்கம், பூசை வழிபாடுகளின்றி எல்லைக் கிராமங்கள் தோறும் புதர் மண்டிக் கிடக்கும், பூர்வீகத் தமிழர்களின் சைவ ஆலயங்களில் எல்லாம் தேவார பாராயணமும், சிவத்தொண்டும் இடம்பெற வேண்டும். வேண்டும் அடியவர்களுக்கு அருளோடு அமுதும் அளித்து அரவணைக்கும் ஆதுரசாலைகளும் அந்த ஆலயங்கள் தோறும் நிறுவப்பட வேண்டும்! அதன் மூலம் மதமாற்றமும் மனமாற்றமும் சைவத்தமிழர்களிடையே ஏற்படுவதை தடுக்க வேண்டும்! பண்பாடு அடுத்த தலைமுறையை நோக்கியும் பெருவெள்ளமாய் பாயவேண்டும்! இதற்கெல்லாம் இறையருள் துணை செய்ய வேண்டும்!

**'மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்'**

**திருச்சிற்றம்பலம்**

# சைவத்தின் தலைமைப்பீடமான இலங்கையின் முதலாவது இந்துக் கல்லூரி

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி




**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"**

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஆங்கில மொழி மூலமான மேல்நாட்டுக் கல்விமுறை கிறித்தவ மிசனரிமாரால் அறிமுகம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மிசனரிமார் பெருமளவு பாடசாலைகளை நிறுவிக் கல்வி புகட்டியபோதும் அவர்களது பிரதான நோக்கம் கிறித்தவ சமயத்தினைப் பரப்புவதாகவே இருந்தது. இதனால் பெருமளவு சைவ மாணவர்கள் மதம் மாறும் நிலை காணப்பட்டது. இதனால் சமூகப் பெரியோர் பலர் சைவத்தையும் தமிழையும் முக்கியத்துவப்படுத்திப் பாடசாலைகளைத் தோற்றுவித்தனர். ஆயினும் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவும் முயற்சி கைகூடவில்லை.

1886இல் தில்லையில் வரம் வேண்டிப் பெற்ற பெரியவர் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை எனும் பேராசானால், நகராக்கிரம விதாலயம் (Town High School) என்னும் பெயரில் ஆங்கிலப் பாடசாலை யாழ்ப்பாண நகரில் தொடங்கப்பட்டது. இதுவே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தொடக்கம் ஆகும்.

சிதம்பரப்பிள்ளை அவர்கள் பல நூல்களை எழுதிய கல்விமான். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தலைமையாசிரியராகப் பல ஆண்டுகள் பதவி வகித்தவர். மிசனரிமாரிடம் கல்வி கற்கும் காலத்தில் வில்லியம் நெவின்ஸ் எனும் பெயரையும் பெற்றவர். அக்காலத்தில் மிசனரிப் பாடசாலையாக இருந்த மத்திய கல்லூரியின் தலைமையாசிரியர் பதவியிலிருந்து விலகிய கையோடு அவர் மிசனரிமாரின் தொடர்புகள் இல்லாமல் சுதேசப் பாடசாலையாக நகராக்கிரம விதாலயத்தைத் தொடங்கினார்.

சிதம்பரப்பிள்ளை அவர்கள் பாடசாலையைத் தொடர்ந்து நடத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டமையால் வேறு ஒருவரிடம் ஒப்படைக்க நினைத்தார். அக்காலத்தில் சமூகப் பணிகளிலும் சைவ சமயப் பணிகளிலும் முன்னின்று உழைத்த சின்னத்துரை நாகலிங்கம் அவர்களிடம் பாடசாலையை 1889இல் ஒப்படைத்தார். நாகலிங்கம் பாடசாலையை சைவர்கள் அதிகம் வசித்த வண்பண்ணைக்கு இடம் மாற்றினார். அக்காலத்தில் பாடசாலை நாகலிங்கம் நகரப் பாடசாலை என அழைக்கப்படலானது.

பாடசாலையைத் தொடர்ந்து முன்னேற்றும் முயற்சியில் நாகலிங்கம் 1890இல் பாடசாலையைச் சைவ பரிபாலன சபையாரிடம் ஒப்படைத்தார். சைவ சமயத்துக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் பாடசாலையின் பெயர் மீண்டும் மாற்றப்பட்டு, The Hindu High School என அழைக்கப்படலானது. அவ்வகையில் 1890 இந்துக் கல்லூரி வரலாற்றின் முக்கிய மைல்கல் ஆகியது.

சைவ பரிபாலன சபையின் கீழ் பாடசாலையின் முதல் முகாமையாளராக நாகலிங்கம் தெரிவானார். கோட்மன் அப்பாப்பிள்ளை அவர்கள் தொடர்ந்தும் தலைமை ஆசிரியராக இருந்தார். பாடசாலைக்கான காணியை வாங்கிப் பாடசாலையை நிலை பெறச் செய்வதற்கு முத்துக்குமாரு செட்டியார், பசுபதிச் செட்டியார் அரும்பணி ஆற்றினார். ஆரம்பத்தில் மோசமான நிலையில் இருந்த பாடசாலையைச் சிறப்பாக முன்னெடுக்கும் முயற்சியில் நெவின்ஸ் செல்லத்துரை அவர்களைப் பாடசாலையின் அதிபராக அழைத்தவரும் பசுபதிச் செட்டியாரே. செல்லத்துரை பாடசாலையை முதலில் ஆரம்பித்த சிதம்பரப்பிள்ளையின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை (நெவின்ஸ் செல்லத்துரை) 18.02.1892இல் பாடசாலையின் அதிபரானார். இவர் காலத்தில் பாடசாலை பெரு வளர்ச்சி கண்டது. அக்காலத்தில் பாடசாலையை மக்கள் 'செல்லத்துரை பாடசாலை' எனவும் அழைத்தனர். 1893இல் கல்கத்தா பல்கலைக் கழகத்தினால் உயர் பாடசாலையாக (High School) அங்கீகரிக்கப்பட்டது. 1895இல் கல்கத்தா பல்கலைக் கழகத்தினால் கல்லூரி என்ற அங்கீகாரமும் வழங்கப்பட்டது. பாடசாலையின் பெயர் "இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்" என மாற்றப்பட்டது. 1895இல் கல்லூரியின் பிரதான கட்டிடமும் திறந்து வைக்கப்பட்டது.

1897இல் நாகலிங்கம் காலமாகியதைத் தொடர்ந்து விசுவலிங்கம் காசிப்பிள்ளை பாடசாலையின் முகாமையாளராகி, 1914 வரை பணியாற்றினார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

**இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் வரலாறு இடம்பெறவேண்டுமாயின்
இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : thennavan@thennadu.org

# சைவத்தின் தலைமைப்பீடமான இலங்கையின் முதலாவது இந்துக் கல்லூரி

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்குப் பின்னர் 1914-24 காலத்தில் அருணாசலம் சபாபதி அவர்கள் முகாமையாளராகப் பணியாற்றினார். நாகலிங்கம், பசுபதி, சபாபதி, காசிப்பிள்ளை ஆகியோர் 1890இல் பாடசாலையைச் சைவ பரிபாலன சபை பொறுப்பேற்ற போது இருந்த முகாமைத்துவக் குழுவில் இருந்தவர்கள். இவர்களுடன் முதலாவது அதிபராகி முக்கிய பணியாற்றிய செல்லத்துரையையும் இணைத்து இந்த ஐவர் பெயரிலேயே கல்லூரியின் விளையாட்டு இல்லங்கள் பெயர் சூட்டப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

தில்லையில் வரம் வேண்டிப் பெற்ற பெரியவர் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை யின் மகன் செல்லத்துரை , மற்றும் சின்னத்துரை நாகலிங்கம், விசுவலிங்கம் காசிப்பிள்ளை, அருணாசலம் சபாபதி என்று எல்லாம் சிவபெயர்களாகவே இருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

1892 முதல் 1909 வரையும் பின்னர், 1914 முதல் 1926 வரையுமாக சுமார் 30 ஆண்டுகள் செல்லத்துரை பாடசாலையின் அதிபராகப் பணியாற்றினார். 1933 முதல் 1952 வரையான 20 ஆண்டுகள் குமாரசுவாமி அவர்கள் அதிபராகப் பணியாற்றினார். அவ்வகையில் இவ்விரு அதிபர்களும் எமது கல்லூரி தனிப்பெருங் கழகமாக வளரப் பெரும் பங்களிப்புச் செய்தனர். குமாரசுவாமி பாடசாலையின் அதிபரான முதலாவது பழைய மாணவன் என்பதும் பெண்களையும் பாடசாலைக்கு இணைத்துப் பின்னர் இந்து மகளிர் கல்லூரி உருவாகக் காரணமான இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது பெயரே எம் கல்லூரியின் பிரதான மண்டபத்துக்குச் சூட்டப்பட்டுள்ளது.

1902 இல் "யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இயக்குனர் சபை" (Board of Directors of Jaffna Hindu College) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு நிர்வாகத்தைப் பொறுப்பேற்றது. அந்த வருடத்திலேயே, இப்போதும் பயன்பாட்டில் இருக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (The Jaffna Hindu College) எனும் பெயர் பயன்பாட்டுக்கு வந்தது.

இந்த இயக்குனர் சபையால் மேலும் பல கிளைப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இக்கிளைகளும் இப்போது பெரும் பாடசாலைகளாக வளர்ச்சியடைந்துள்ளன. கொக்குவில் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி போன்றவை அத்தகைய பாடசாலைகள் ஆகும்.

1960 டிசம்பரில் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற காலம் வரை இந்த இயக்குனர் சபையே கல்லூரியை நிர்வகித்தது. அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்றபோது இயக்குனர் சபை ஆரம்பத்தில் திட்டமிட்ட வகையில் , ஆரம்பித்த தேவை மற்றும் நோக்கங்களுடன் கல்லூரி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இணக்கம் காணப்பட்டது.

1903இல் இந்து இளைஞர் கழகம் தொடங்கப்பட்டது. 1907இல் இலக்கியச் சங்கம் தொடங்கப்பட்டு வாராந்த கூட்டங்கள் நடைபெறத் தொடங்கியது. 1916இல் சாரணர் துருப்பு உருவாக்கப்பட்டது. 1943இல் மாணவர் முதல்வர் சபை தொடங்கப்பட்டது. 1965இல் தமிழ்ப் பேரவையும், 1975இல் சதுரங்கக் கழகமும் உருவாகின. தமிழ்ச் சங்கம் 1989இல் தொடங்கப்பட்டது. 1981இல் பரியோவான் முதலுதவிப் படையும், 1989இல் செஞ்சிலுவைச் சங்கமும் உருவாகின. 1991 இல் இன்ரறக்ற் கழகம், லியோ கழகம் ஆகியனவும் 1992இல் சேவைக்கழகமும் தொடங்கப்பட்டன. இத்தகைய கழகங்கள், சங்கங்களில் சேர்ந்து இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் கல்வியிலும் தலைமைத்துவத்திலும் பாடசாலைக்கு வெளியேயும் மிளிர்பவர்களாக உள்ளனர்.



1899இல் துடுப்பாட்டக் கழகமும் (cricket club) 1904இல் உதைபந்தாட்டக் கழகமும் தொடங்கப்பட்டன. ஆரம்பத்தில் பாடசாலைக்கெனத் தனியான மைதானம் இருக்கவில்லை. காக்கைவெளி போன்ற இடங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடந்துள்ளன. குத்தகைக்குப் பெற்று முற்றவெளி மைதானத்தை மாணவர் பயன்படுத்தி வந்தனர். 1933இல் இல்ல விளையாட்டுப் போட்டிகள் தொடங்கப்பட்டன. 1938-06-25 அன்று கல்லூரியின் விளையாட்டு மைதானம் சிறிய அளவில் திறக்கப்பட்டது. 1954 இல் இந்து ஆரம்ப பாடசாலை புதிய இடத்துக்கு நகர்த்தப்பட்ட பின் அக்காணியையும் இணைத்து மைதானம் விரிவாகியது. இதன் பின்னர் 1992 முதல் அயற் காணிகளை இணைத்து மைதானத்தை விரிவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2001இல் குமாரசுவாமி மண்டபத்துக்கு அருகே கூடைப் பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்டது.

கல்லூரியின் நூலக வரலாறு 1887இல் தொடங்குகிறது. 1887இல் நாகலிங்கத்தால் விக்ரோறியா வாசிகசாலை எனும் நூலகம் தொடங்கப்பட்டது. இது 1895இல் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. 1910இல் இவ்வாசிகசாலை சைவ பரிபாலன சபையால் பொறுப்பேற்கப்பட்டுப் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வாசிகசாலை ஆனது. 1950இல் முழுநேர நூலகர் நியமிக்கப்பட்டார். பஞ்சலிங்கம் அதிபர் காலத்தில் உயர்தர மாணவருக்குத் தனியான நூலகமும் ஏனைய மாணவர்களுக்கு இரண்டு நூலகங்களும் என நூலகம் மூன்று பிரிவுகளாக்கப்பட்டது. பின்னர் இளநிலை நூலகங்கள் ஒன்றாக்கப்பட்டன. இந்த நூலகம் 2015இல் ஐக்கிய இராச்சியப் பழைய மாணவர் சங்கத்தினால் விரிவாக்கப்பட்டுச் சிவராமலிங்கம் நினைவு நூலகமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி தொடங்கப்பட முன்னரே கல்லூரிக்கென வாங்கப்பட்ட காணியில் வைரவ சூலம் அமைத்து, வழிபாடு நடைபெற்று வந்தது. 1895 அளவில் ஒரு கொட்டில் அமைத்து பூசைசெய்யும் ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டன. 1903இல் அதிபர் செல்லத்துரையின் முயற்சியால் இந்து இளைஞர் கழகம் தொடங்கப்பட்டது. 1923 அளவில் சிவஞான வைரவருக்கென கோயில் அமைக்கப்பட்டது. 1945 இன் பின்னரான காலத்தில் அக்கோயில் மாற்றப்பட்டு இன்னோரிடத்தில் கோயில் அமைக்கப்பட்டது. அக்கோயில் மேற்குநோக்கி அமைந்திருந்தமையால் 1963இல் அது கிழக்கு நோக்கியதாகத் திருத்தியமைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் பழைய இடத்தில் கோயில் அமைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு இப்போதுள்ள கோயில் 1989-03-10 அன்று முதன்முதலில் குடமுழுக்குக் கண்டது. 2018இல் கல்லூரியில் ஞானலிங்கேச்சரர் பீடம், பல அருளாளர்களும் முழங்கிய மிகவும் பழமை வாய்ந்த பிரார்த்தனை மண்டபத்தின் முன்னிருக்கும் மேடையில் அமைக்கப்பட்டு, அங்கே தமிழ்க் கடவுளான சிவன் , சிவலிங்க வடிவத்தில் எழுந்தருளப்பட்டு அட்டி வருடம் துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 5ம் நாள், கழுவாய் வழிபாட்டு நாளான (பிரதோஷம்) பதின்மும்மைப் பிறைநாள் அன்று திங்கட்கிழமை (22-10-2018) கடவுள்மங்கல நன்னீராட்டு செய்யப்பட்டு, பின்னர் தமிழ் பூசை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு மாணவர்களே தாமாக வழிபடும் பண்பாடு புதுப்பிக்கப்பட்டது.

பழைய மாணவர் சங்க அனுசரணையில் "Jaffna Hindu College Calendar, 1910" எனும் ஆண்டுமலர் முதன்முதலாக 1910இல் வெளியானது. கல்லூரியின் ஆரம்ப வரலாறு தொடர்பான பல தகவல்களை இது கொண்டிருக்கிறது. 1911இல் The Jaffna Hindu College Magazine எனும் கல்லூரிச் சஞ்சிகையும் ஆரம்பிக்கப்பட்டது. 1937 இல் இந்து இளைஞன் (Young Hindu) சஞ்சிகை தொடங்கப்பட்டது. இச்சஞ்சிகையே இப்பொழுதும் ஆண்டுமலராகத் தொடர்ந்து வெளியிடப்படுகிறது.

எமது கல்லூரியின் முதலாவது நிரந்தர கட்டிடத்துக்கான அடிக்கல் 1891இல் நாட்டப்பட்டு 1895இல் திறக்கப்பட்டது. 1903இல் இலங்கையிலும் மலேசியாவிலும் நிதி திரட்டப்பட்டுக் கட்டிடங்கள் பூர்த்திசெய்யப்பட்டன. 1928இல் புதிய விடுதிக் கட்டிடம் திறக்கப்பட்டது.



(06ஆம் பக்கம் பார்க்க)

# சைவத்தின் தலைமைப்பீடமான இலங்கையின் முதலாவது இந்துக் கல்லூரி

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

1956இல் விடுதிக்கான உணவு மண்டபம் உருவானது. 1960இல் கல்லூரி மண்டபம் குமாரசாமி மண்டபம் எனப் பெயர் மாற்றப்பட்டதுடன் அதனை விரிவாக்கும் முயற்சிகள் தொடங்கின. 1963இல் வடபகுதியில் புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டன. 1964இல் புதிய நிர்வாகக் கட்டிடம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து காங்கேசன்துறை வீதி வாசல் மூடப்பட்டுக் கல்லூரி வீதி வாசல் திறக்கப்பட்டது. நிர்வாகக் கட்டிடத்துக்கு அதிபர் சி.சபாரத்தினத்தின் பெயர் சூட்டப்பட்டது.

விடுதிச் சாலையுடன் இணைத்து உருவாக்கப்பட்ட கட்டிடத்தில் அதிபர் இ. சபாலிங்கம் நினைவுக் கலையரங்கம் 2015இல் அமைக்கப்பட்டது.

பாடசாலை விடுதி 1891இல் தொடங்கப்படபோதும் சில ஆண்டுகளுக்கு மேல் தொடர முடியவில்லை. 1910இல் விடுதிச்சாலை மீண்டும் தொடங்கப்பட்டது. 1990-2008 காலப்பகுதியில் போர்ச்சூழல் காரணமாக விடுதி இயங்கவில்லை. 2011இல் விடுதியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

போர்க்காலத்தில் பல இழப்புக்களைக் கல்லூரி சந்தித்தது. 1989 தை மாதத்தில் ஆசிரியர் ஒருவர் பாடசாலைக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். பாடசாலை செல் தாக்குதல்களுக்கும் இலக்கானது. அகதிகள் பாடசாலைக்குள் சாவடைந்தனர். 1995இல் பாடசாலை இடம்பெயர்ந்து தற்காலிகமாகத் தென்மராட்சியில் இயங்கியது. 1996இல் மீண்டுவந்தபோதிலும் இடைக் காலத்தில் பெருமளவு ஆவணங்கள், சொத்துக்கள் இழக்கப்பட்டன.

காலத்துக்குக் காலம் பல பெருமக்கள் எம் கல்லூரிக்கு வருகை தந்துள்ளனர். 1897.01.24 சுவாமி விவேகானந்தர் பாடசாலைக்கு வருகை தந்து வேதாந்தம் பற்றிச் சொற்பொழிவாற்றினார். 1906-06-04 அன்று கலாயோகி ஆனந்தகுமாரசாமி வருகை தந்து மாணவர்கள் தேவாரத்தைக் கற்பதற்கும் பண்ணுடன் பாடுவதற்கும் உதவும் முகமாக 5,000 ரூபா நன்கொடையும் வழங்கிச் சென்றார். 1927-11-27 மகாத்மா காந்தி வருகைதந்து உரையாற்றினார். 2012-01-23 அப்துல் கலாம் வருகைதந்து உரையாற்றினார்.

கல்லூரியில் ஆண்டுதோறும் பரிசுத்தினம், இல்ல விளையாட்டுப் போட்டி, ஆசிரியர் தினம், தைப்பொங்கல் விழா, சேக்கிழார் விழா , நவராத்திரி போன்றன கொண்டாடப்படுகின்றன. கழகங்கள், சங்கங்களால் தமிழ்த்தினம், ஆங்கிலத்தினம் போன்ற நிகழ்வுகள் விமரிசையாக முன்னெடுக்கப்படுகின்றன.


மாணவர்களின் தமிழ் மொழிமூலமான வழிபாடு

இந்நிகழ்வுகளில் வரவு, நவமலர், இந்து விஞ்ஞானி போன்ற மலர்களும் வெளியிடப்படுகின்றன. 2016 முதல் தைப்பொங்கல் விழா தமிழ்க் கலாசாரத்தைப் பறைசாற்றும் வகையில் பிரமாண்டமாகக் கொண்டாடப்படுகிறது.

1905-01-09 அன்று பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1910இல் கொழும்புப் பழைய மாணவர் சங்கக் கிளை உருவானது. 1987இல் ஐக்கிய இராச்சியத்திலும் 1990களின் ஆரம்பத்தில் கனடாவிலும் பழைய மாணவர் சங்கங்கள் உருவாகின. அவுஸ்திரேலியாவில் 1990இல் மெல்பேணிலும் 1994இல் சிட்னியிலும் பழைய மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. பாடசாலையின் செயற்பாடுகளுக்குப் பழைய மாணவர் சங்கங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன.

ஏறத்தாழ 130 வருடகால வரலாறு கொண்ட, இக்கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்கள் உலகெங்கும் பல சாதனைகளைப் புரிந்துவருகின்றனர். ஆண்டுதோறும் பெருமளவு வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் இந்துக் கல்லூரி உருவாக்கி வருகிறது. அத்துடன் அறிவியலாளர்கள், சட்டவாளர்கள், நிர்வாகிகள், பேராசிரியர்கள், புவியியலாளர்கள், அரசியல்வாதிகள், போராளிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமயத் தலைவர்கள், ஆவணக்காப்பாளர்கள், சமூகத் தலைவர்கள், பேச்சாளர்கள், கவிஞர்கள், விளையாட்டு வீரர்களையும் உருவாக்கிய பெருமை இக்கல்லூரியைச் இவர்கள் தாயகத்திலும் வெளிநாடுகளிலும் பல்வேறு தலைமைப் பதவிகளிலும் பொறுப்பான பதவிகளிலும் இருந்து பணியாற்றி வருகிறார்கள்.

வைத்தினையும், சைவப் பண்பாட்டினை கட்டிக்காக்க, அழிவில் இருந்து பாதுகாக்க எமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட கல்லூரி என்ற நினைவு தொடரவேண்டும், சைவத் தமிழ் தலைவர்கள் பலர் இங்கிருந்து உருவாகவேண்டும் என்ற அவர்களின் எண்ணங்களை மனதில் நிறுத்தி , கல்லூரி ஞானலிங்கேச்சரப் பெருமானையும், ஞானவைரவப் பெருமானையும், மனம், மொழி ,மெய்களினாலே வேண்டி வணங்குகின்றோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**திருச்சிற்றம்பலம்**

# சிலோன் வர்த்தமானியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பதிவு

## The Jaffna Hindu College - 24 Jan 1902

**Ceylon Government Gazette**

Published by Authority.

No. 5,830—FRIDAY, JANUARY 24, 1902.

Part I.—General: Minutes, Proclamations, Appointments, and General Government Notifications.
Part II.—Legal and Judicial.
Part III.—Provincial Administration.
Part IV.—Marine and Mercantile.
Part V.—Municipal and Local.

*Separate paging is given to each Part in order that it may be filed separately.*

**Part II.—Legal and Judicial.**

| | Page | | Page |
|---|---|---|---|
| Passed Ordinances ... | — | Notices in Testamentary Actions ... | 73 |
| Draft Ordinances ... | 61 | Notices in Insolvency Cases ... | 75 |
| Notices from Supreme Court Registry ... | — | Notices of Fiscals' Sales ... | 76 |
| Notices from Council of Legal Education ... | — | Notices from District and Minor Courts ... | 81 |
| Notifications of Criminal Sessions of Supreme Court ... | — | List of Articled Clerks ... | — |
| Lists of Jurors and Assessors ... | 73 | | |

MINUTE.

The following Draft of a proposed Ordinance is published for general information :—

**An Ordinance to Incorporate "The Board of Directors of the Jaffna Hindu College."**

Preamble. WHEREAS several of the inhabitants of the Northern Province have established an institution called and known as the "Hindu College" at Vannarponnai, in the District of Jaffna, and it is found desirable to constitute certain persons one body politic and corporate for the purpose of effectually transacting all affairs connected with the said college according to the constitution agreed to by its founders : Be it therefore enacted by the Governor of Ceylon, by and with the advice and consent of the Legislative Council thereof, as follows :

Incorporated under the name and title of "The Board of Directors of the Jaffna Hindu College." 1 The persons named in the schedule A hereto, being the present directors of the said college, and such persons as may hereafter be appointed from time to time directors of the said college, as declared and set forth in the schedule B hereto, shall be one body politic and corporate by the name of "The Board of Directors of the Jaffna Hindu College," and by the said name they shall have perpetual succession, and shall and may use a common seal, with power to change and alter the same at their pleasure.

Corporation may sue and be sued, &c. 2 They and their successors by the same name may sue and be sued, implead and be impleaded, answer and be answered unto, defend and be defended, in all and any courts whatsoever, and before any judge, magistrate, or judicial officer within this island, in all manner of actions, suits, complaints, matters, and causes whatsoever.

May hold movable and immovable property. 3 They and their successors by the name aforesaid shall be able and capable in law of holding all such estate, movable and immovable, as hath been already acquired by them, and of having, taking, and holding for ever hereafter

Part II. — CEYLON GOVERNMENT GAZETTE — Jan. 24, 1902

*Section B.*

| | |
|---|---|
| Rai Bahadur C. Murugesampillai, B.A. | V. Velayuthampillai, Esq. |
| Dr. M. Candaiyah. | S. Subramaniam, Esq. |
| I. I. Modr. Tillainader, Esq. | V. Mudr. Sivasidambaram, Esq. |
| S. Sivagurunader, Esq. | R. N. Arulambalam, Esq. |
| S. Duraisamy, Esq. | V. Coomarasamy, Esq. |

*Section C.*

| | |
|---|---|
| T. Chellappapillai, Esq., B.A., B.L. | S. Kandaiyah, Esq. |
| V. Casippillai, Esq. | S. Visuvappa, Esq. |
| S. T. M. Pasupathi Chettiar, Esq. | K. Mudr. Navaratnam, Esq. |
| A. Sapapathy, Esq. | S. Nagalingam, Esq. |
| S. Veluppillai, Esq. | V. Sanmugam, Esq. |

The directors named in section A and their substitutes elected as in article 8 hereof provided may hold office until the first election of directors as in article 6 hereof provided, and those named in section B and their substitutes until the second election, and those named in section C and their substitutes until the third election respectively as hereinafter provided.

6. The first election of directors shall be held at the first annual general meeting to be holden under this constitution as in article 9 hereof provided, and at the said election the directors then forming section A shall retire from office, but shall be eligible for re-election.

The directors then forming section B and C shall elect directors (not exceeding ten in number) to form section A of the directorate body for the period of three years next ensuing.

The second and third election of directors shall in like manner be held at the second and third annual general meetings respectively which shall be holden under this constitution, the directors then forming section B retiring at the second, and those forming section C at the third annual general meeting, but in each case being eligible for re-election; and this rotation of retirement of each of the three sections successively, with like eligibility for re-election, shall be observed in the elections to be holden in each successive year thereafter.

7. At each such election every one who is a Hindu by religion and who shall then be resident in the peninsula of Jaffna and willing to interest himself in the working of the college shall be eligible for election as a director; but no person convicted of any infamous crime shall be eligible as a director.

8. A director shall vacate his office by death or resignation. Whenever any such vacancy shall occur, the directors may elect as substitute for such director in the section to which he belonged any person who, under the requirements of article 7 would be eligible to be elected as a director at an annual general meeting, and such substitute shall be and officiate as a director until the section into which he shall be so elected shall retire from office, or he himself shall vacate his office in any manner before-mentioned.

9. The annual general meeting of the board of directors shall be held at such time shortly after the close of each collegiate year, when defined as in article 14 hereof provided, and at such place as the directors for the time being shall determine, notice whereof in writing shall be posted or given by the secretary to each director seven days previously thereto; and at each such meeting shall be presented by the secretary a full report of the operations and condition of the institution, and by the treasurer a statement of accounts, properly audited by the auditor, showing all moneys received and disbursed during the year then lately ended.

10. A meeting of the board of directors shall be held at least once in every year upon such date or dates and at such place or places as the board of directors shall from time to time determine, and at such other times as on the requisition in writing of five directors or of the standing committee (as in article 17 provided) shall be by the secretary notified to each director.

11. At any meeting of the board duly convened and holden nine directors shall form a quorum.

12. The officers of the board of directors shall consist of a president, vice-president, auditor, treasurer, secretary, and an assistant secretary, each of whom shall be elected out of the body of directors by the members of the board present at the meeting of directors held immediately after the election of a new section of the board as provided in article 6, and shall continue to hold office until the close of the annual general meeting, which shall be held

Part II. — CEYLON GOVERNMENT GAZETTE — Jan. 24, 1902 71

other estate, movable and immovable, either by purchase, gift, devise, or legacy, to and for the use and benefit of the said college, and of selling, disposing of, or exchanging the same.

Power to sell lands. All securities for money in the name of trustees of the said college vested in the corporation. 4 And all mortgages and other securities for money, lands, and tenements in the name of any persons as trustees of the said college, shall be and the same are hereby declared to be transferred and vested in the said "Board of Directors of the Jaffna Hindu College" and their successors in the corporate name as fully as if the same had been assigned and transferred by the trustees in whose names the same are now held to the said corporation, and the said corporation shall have full power to assign, transfer, and dispose of all such mortgages and other securities to which they shall be entitled as the said corporation shall think proper.

Short title. 5 This Ordinance shall be called "The Ordinance for Incorporating the Board of Directors of the Jaffna Hindu College," and may be cited as such for all purposes.

Schedule A.

| | |
|---|---|
| T. Chellappapillai, Esq., B.A., B.L. | S. Kandaiyah, Esq. |
| Rai Bahadur C. Murugesampillai, B.A. | R. N. Arulambalam, Esq. |
| A. Kanagasabai, Esq., B.A. | S. Visuvappa, Esq. |
| V. Casippillai, Esq. | M. Sidambaranader Modr. |
| S. T. M. Pasupathi Chettiar, Esq. | K. Mudr. Navaratnam, Esq. |
| A. Mailvaganam, Esq., J.P. | S. Duraisamy, Esq. |
| A. Sapapathy, Esq. | C. MuttuCoomarasoorier, Esq. |
| R. Kantaiyah, Esq. | S. Nagalingam, Esq. |
| C. M. Sinnaiyah, Esq. | V. Velayuthampillai, Esq. |
| S. Sabaratnam, Esq. | S. Kanagaratnam, Esq. |
| Dr. M. Candaiyah. | V. Sanmugam, Esq. |
| I. I. Modr. Tillainader, Esq. | S. Subramaniam, Esq. |
| V. A. Ampalavaner, Esq. | V. Mudr. Sivasidambaram, Esq. |
| S. Vellupillai, Esq. | V. Mudr. Sittampalam, Esq. |
| S. Sivagurunader, Esq. | V. Coomarasamy, Esq. |

Schedule B.

*Constitution agreed to by the Founders of the Jaffna Hindu College.*

1. The institution shall be called "The Jaffna Hindu College."

2. It shall be conducted on purely Hindu lines, and its directors shall be members professing the Hindu religion.

3. The object shall be to give all pupils admitted into the college a thorough general education and daily Hindu religious instruction.

4. The general government and direction of the college shall be vested in a board of directors, not more than thirty and not less than twenty-four in number, distributed (for purposes of retirement and election of directors as in Article 6 provided) into three sections, designated as sections A, B, and C, each section not exceeding ten in number.

5. The board of directors of the college shall, upon enactment of this constitution, consist of the following directors, distributed for such purposes as aforesaid into the following sections, viz. :—

*Section A.*

| | |
|---|---|
| A. Kanagasabai, Esq., B.A. | V. A. Ampalavaner, Esq. |
| A. Mailvaganam, Esq., J.P. | M. Sidambaranader Mudr. |
| R. Kantaiyah, Esq. | V. Mudr. Sittampalam, Esq. |
| C. M. Sinnaiyah, Esq. | C. MuttuCoomarasoorier, Esq. |
| S. Sabaratnam, Esq. | S. Kanagaratnam, Esq. |

# ஈழத்து சித்தர்கள் : தவத்திரு அருளம்பலம் சுவாமிகள்

# ஈழத்து சித்தர் கடையிற் சுவாமிகளின் சித்தர் குருபரம்பரையில் நான்காவது சித்தர்



தவத்திரு.அருளம்பலம் சுவாமிகள்

## யாழ் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டியவர்களில் ஒருவர்

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வண்பண்ணை சிவலிங்கப் புளியடியில் இராமநாதர், சின்னாச்சிப்பிள்ளை என்ற சைவத்தமிழ் தம்பதியினர் வசித்து வந்தனர். “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.” என்ற திருக்குறள் நெறிக்கு ஏற்ப சைவசமயத்தில் நிறைந்த பற்று உள்ளவர்களாகவும், சமய நெறிகளை கடைப்பிடித்தும், சிவபத்தி நிறைந்த அடியார்களை வரவேற்று, அமுது செய்து, மகிழ்வார்கள். இவர்கள் இருவருக்கும் கி.பி 1866ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் (அட்சய வருடம்) 2ம் திகதி கடைசிப்பிள்ளையாக அருளம்பலம் அவர்கள் பிறந்தார்.

இன்றைய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இருக்கும் இடத்தில் அந்நாளில் யாழ்ப்பாண அகேடமி என்ற பெயரில் ஒரு பாடசாலை இருந்தது. இயற்கை விவேகமும், முயற்சித்திறனும் உடையவரான அருளம்பலம் விரைவில் கற்றுத்தேறி, சென்னை மெற்றிக் குலேசன் பரீட்சையில் சித்தியடைந்து, இளம் வயதிலேயே அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்தார்.

அந்நாளில் வைரமுத்து செட்டியார் என்று ஒருவர் இருந்தார். இவர் இந்தியாவிற்கு யாத்திரை செல்லும் வழக்கமுடையவர். சிறிது காலத்தின் பின், செட்டியார் வீட்டிற்கு ஒரு சுவாமிகள் வந்திருந்தார். அவர் தான் கடையிற்சுவாமி என்றும், யாழ் மண்ணில் கால்வைத்த முதல் செய்தி என்றும், அறியப்பட்டது. கடையிற்சுவாமிகள் உணவு அருந்தும் இடங்களில் ஒன்று, இராமநாதர், சின்னாச்சிப்பிள்ளை இல்லம். அங்கே அருளம்பலம் 3 வயது பாலகனாய் இருந்தார். சின்னாச்சிப்பிள்ளை அமுது படைக்கும் போது, அருளம்பலவர் கடையிற்சுவாமிகளின் அருகில் இருப்பார். அருளம்பலத்தின் முதுகைத் தடவிக்கொண்டே, சோறு ஊட்டி தானும் உண்பர்.

சிறிது காலத்தின் பின், அருளம்பலம் அவர்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் பிரதம லிகிதராக மாகாண பதிவுப்பகுதியில் உத்தியோகம் பார்த்து வந்தார். இக்காலத்தில் கடையிற்சுவாமிகளின் சீடரான குழந்தைவேல் சுவாமிகளின் பால் ஈர்க்கப்பட்டார். பின் மட்டக்களப்பில் கச்சேரியில் காணிப்பதிவு காரராய் மாற்றம் பெற்று சேவையாற்றினார். இவருக்கு மேலதிகாரியாக சேர்.பொன் அருணாசலம் இருந்தார். அக்காலத்தில் மட்டக்களப்பில் சைவமும், தமிழும் கல்வி நிலையில் குறைவாக இருந்த படியால், அதைக்கண்டு மனம் வெதும்பி, அங்கு செல்வந்தராக இருந்த கே.வி மார்கண்டு என்பவரின் உதவியை பெற்று, பல சைவப் பாடசாலைகளை நிறுவினார்.

மட்டக்களப்பில் ‘சுத்தாத்வைத் அச்சு இயந்திர சாலை’ என்னும் பெயரில் ஒரு அச்சு கூடம் ஒன்றை நிறுவினார். தனது குரு குழந்தைவேல் சுவாமிகளின் மேல் பத்தியோடு பாடிய அகராதிச் சரணமாலை எனும் நூல் 1920இல் இந்த அச்சுக்கூடத்தில் பதிக்கப்பெற்றுள்ளது. கொழும்பு தேசிய நூலகத்தில் இன்றும் இந்த நூல் உள்ளது.

தான் கண்ட கனவில் பிரகாரம் மட்டக்களப்பில் ஆரையம்பதிக்கு வந்து, ஊர்ப்பிரமுகர்களைச் சந்தித்து, குறித்த இடத்தை தோண்டிப்பார்த்த போது, ஒரு சித்தரின் சமாதி பிள்ளையார் உருவில் இருந்ததை கண்டு, பத்தியோடு ஒரு பந்தல் அமைத்து, அதில் பூசகர் ஆகவும் இருந்துள்ளார். 1916 ஆம் வருடம் உருவான இந்தக்கோயில் சமாதடிப்பிள்ளையார் கோயில் என இன்றும் உள்ளது. தனது 49 ஆவது வயதில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றார்.

ஒரு முறை குழந்தை வேல் சுவாமிகளும், அருளம்பலம் அவர்களும், வேறு சில அடியார்களுடன் மண்டைதீவு பக்கமிருந்து வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அருளம்பலம் அவர்களின் நண்பன் ஆறுமுகம் புகையிலைச் சிப்பங்களை ஏற்றிக்கோண்டு, வந்ததை கண்டார்கள். கடையிற்சுவாமி ஒடுங்கிக்கொண்டு இருப்பதான தகவலை அறிவித்து யாழ்ப்பாணத்திற்கு மீண்டார்கள். நீராவியடியில் இரு கால்களையும் இரு கைகளையும் தியான கோல வடிவில் மடியில் வைத்தவாறு நிலத்தில் எதுவித

ஆதாரமும் இன்றி சமாதியாகி இருந்தார்கள். சமாதிக்காரியங்களை ஆறுமுகம் அவர்களும் அருளம்பலம்அவர்களும், குழந்தைவேல் சுவாமிகளும் வேறு பல சீடர்களும் நிறைவேற்றினார்கள். பின்னாளில் அருளம்பலம் அவர்களின் நண்பன் ஆறுமுகம் அவர்கள் இந்தியாவில் வில்லிபுத்தூரில் சமாதியாகி ஆறுமுகசுவாமி என அறியப்பட்டார்.

அருளம்பலம் அவர்கள், சுத்ததர்ம மண்டலம் எனும் அமைப்பில் சேர்ந்து இலங்கைக்கான பிரதிநிதியாக இருந்துள்ளார்கள். இவரின் திரு உருவப்படம் அவர்களால் தான் எடுக்கப்பட்டது. கனடாவின் மொன்றியல் நகரிலும், தென் அமெரிக்காவின் சிலியிலும் இன்றும் உள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை நிறுவியரான சிவத்திரு.சிதம்பரம்பிள்ளை ஆரம்பத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் (அகேடமி) தலைமை ஆசியராக இருந்துள்ளார். அவரிடம் மாணாக்கராக இருந்தவர்கள் தான் பின்னாளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆரம்பகால உறுப்பினர்களாகவும் இருந்துள்ளார்கள். அருளம்பல சுவாமிகள் ஆரம்பகாலக் கல்வியை ஆறுமுகநாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் உயர் கல்வியை யாழ்ப்பாண அகேடமியிலும் கற்றுள்ளார்கள்.

இந்தியாவில் தமிழ் நாட்டில் அடையார் என்னும் ஊரின் நூலகத்திலிருந்து “தியோசொவி” என்ற பத்திரிகையைத் தருவித்து, யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் நூலகத்திற்கு அளித்துள்ளார். அக்காலத்தில் ‘இந்திரா சபா’ என்ற பெயர் கொண்ட நாடகக்குழு, நாடகங்கள் நடாத்தி வந்தது. அதன் ஒரு நாள் வருமான பணத்தை இந்துக் கல்லூரிக்கு கிடைக்கும் படி செய்தார்கள். இதன் மூலம் ரூபா 225 கிடைத்தது. கல்லூரி நிர்வாக சபைக்கு சுவாமிகளின் அண்ணர்களான ஆராட்சியார் இ.பொன்னம்பலம், இ. கந்தையா முதலியார் போன்றவர்களும் பணம் சேகரித்து அளித்துள்ளார்கள். இந்நிகழ்வு 1899 ஆம் வருடம் முதல் நடந்து வந்தது.

சொல்லும் பொருளும் படிப்போர் உள்ளத்திலே உறுத்திச் செல்லுமாறு சொல்லும் தன்மை நாவலர் பெருமானுக்கு கைவந்த ஒன்று. இது அருளம்பலம் சுவாமிகளுக்கும் கைவந்துள்ளமை அவர் எழுதிய வசன நடையில் அவதானிக்கலாம்.





சுவாமிகள் பிறந்த வீடு
வண்பண்ணை

குழந்தைவேல் சுவாமிகளின் பேரில் பாடிய அகராதிச் சரணமாலை எனும் நூலில் முப்பது பாடல்கள் உள்ளன. தியான அனுபவத்தில் தாம் பெற்றுள்ள தத்துவக் காட்சி உண்மைகளையும், இறைவனுடைய அருள் நடனமாகிய நடராசர் நடனத்தை ஐந்து எழுதியுண்மையில் அடக்கிகாட்டுவதும், ஆன்மத் தரிசனமும், சிவதரிசனமும் நிழல்தற்கிடமாகிய அத்துவித அனுபவ நிலையில் ஆன்மா நிற்குமாறு உணர்த்தி, தான் பெற்றிருந்த சுத்தாத்துவ சித்தாந்த தெளிவை நன்கு புலப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்ப கால நிர்வாக சபையின் உறுப்பினராகவும், இந்துக் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தின் அடிக்கல் வைத்தவர்களில் அருளம்பலம் சுவாமிகளும் ஒருவர். 1895 ஆம் வருடம் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், இந்து சாசனம் பத்திரிகைக்காகவும் பெரிதும் உழைத்தார்.

கடையிற் சுவாமிகள், குழந்தைகள்வேல் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள் மூவரும் பெரும்பாலும் சஞ்சாரம் செய்த இடம், வண்பண்ணை ஆகும். இப்பிரதேசத்தில் சிவன் கோயிலடியில் இருந்து சிவலிங்கப் புளியடிவரை உள்ள பகுதியிற் சைவவாழ்விற்கான நற்பண்புகள் இன்றும் திகழக் காண்கின்றோம். நாவலர் பள்ளிக்கூடம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, நாவலர் மணிமண்டபம், சிவத்தொண்டன் நிலையம் என்ற நான்கு சிறந்த சைவ அமைப்புக்கள் உள்ளன. நாவலர் பெருமானின் அச்சு இயந்திர சாலையும் இவ்விடத்தில் தான் இருந்தது.

ஆங்கில அறிவும், செந்தமிழ் ஞானமும், கூர்ந்த மதியும், விடா முயற்சியும், சமயாபிமானமும் உடையவரான அருளம்பலம் சுவாமிகள் 1925ம் வருடம் (குரோதன்) ஆனி மாதம் 28ம் நாள் அந்த நாளில், காலை 11 மணியளவில் தமது இல்லத்தில் தேகவியோகமானார். இறைவன் அடிசேரும் போது அவருக்கு வயது 59. கீரிமலையில் சுவாமிகளின் தேகம் அதற்கென முற்கூட்டியே அமைக்கப்பட்ட இடத்தில் சமாதி இருத்தப்பட்டது. குழந்தைவேல் சுவாமிகளின் ஞானவாரிசான அருளம்பலம் சுவாமிகள், அவரின் சமாதிக் கோயிலின் கிழக்குப்புறமாக வைக்கப்பட்டார். அருளம்பலம் சுவாமிகளின் சீடர்களில் ஒருவரான நவாலியூர் இ.வைத்திங்கம் அவர்களால் பாடப்பெற்ற பாடல்களில் ஒன்று,

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு யோகர் சுவாமிகள்

## [இல்லாத தேநீர்க் கடையை காண்பித்த அதிசயம், எண்சித்திகளிலும் வல்ல சித்தயோக சுவாமிகள்]

**(யோகர் சுவாமிகள் கடந்தமாதத் தொடர்ச்சி)**

1996ல் என்னுடைய எண்பதாவது வயது நிறைவு நாளில் இராமனைப் பற்றி புதிய கோணத்தில் ஒரு நூல் எழுதுமாறு திரு ஆர். துரைசாமி நாயுடு (கோவை) அவர்கள் பணித்தார்கள். "இராமன் பன்முக நோக்கில்" என்ற நூலை எழுதினேன். 1997 பிப்ரவரியில் திரு நாயுடு அவர்கள் தம் செலவில் அதை வெளியிட்டார்கள். பெரியபுராணத்தை சேக்கிழாரின் அடிப்படையில் இல்லாமல் சமுதாய அடிப்படையில் காணவேண்டுமென்ற எண்ணம் மனத்தில் தோன்றியதுண்டு. அதற்கு வடிவு கொடுக்கத் தொடங்கி 1997 ஜூலையில் "சேக்கிழார் தந்த செல்வம்' என்ற நூலை வெளியிட்டேன்.


நூல்கள் எழுதும் பழக்கமுடைய நான் இவை இரண்டையும் எழுதியதில் என்ன புதுமை என்று பலர் நினைக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரை யோகர் சுவாமிகள் இட்ட கட்டளை என்று ஒவ்வொரு விநாடியும் நினைக்கின்றேன். என்ன காரணத்தாலோ! சென்ற நாற்பது ஆண்டுகளாக இவ்விருவரையும் தாண்டி வெளியே செல்ல முடியவில்லை. தொல்காப்பிய பொருளதிகாரத்திலுள்ள, மெய்ப்பாட்டியல், உவமவியல் என்ற இரண்டிற்கும் புதிய முறையில் மாறுபட்டு, உரை எழுதும் எண்ணம் பல்லாண்டுகளாக இருப்பினும் ஏனோ எழுதமுடியவில்லை.

தமிழ்த் தென்றல் திரு வி. க. அவர்கள் திருவாசகத்திற்கு என்னால் ஓர் உரையெழுதப்படவேண்டும் என்று பலமுறை என்னிடம் கூறியதோடு அவருடைய வாழ்க்கைக் குறிப்பிலும் இதனை எழுதியுள்ளார்கள். என்ன காரணத்தாலோ! முடியவில்லை. எண்பது, அதுவும் வயது பூர்த்தியாகும் போதும் இராமனைப் பற்றியும், சேக்கிழார் பற்றியுமே அடுத்தடுத்து இரண்டு பெரிய நூல்களை எழுதி வெளியிட முடிந்த தென்றால்! அதன் உண்மையான காரணம் அ. ச. ஞா. என்ற தனி மனிதனுடைய காரணமல்ல. எந்த விநாடி மகான் வாயைத் திறந்து 'அந்த இருவரையும் வெட்டிப் புதைக்க வேண்டும்' என்று சொன்னார்களோ அந்த விநாடியிலிருந்து அந்த முயற்சியோ, விருப்பமோ அதே பணி என்னையும் அறியாமல் நடந்து கொண்டிருக்கிறது.

எண்பது வயதைக் கடந்தாலும் என்னுடைய குரல்வளத்தைக் கண்டு வியப்படைந்து 'எப்படி உனக்கு இந்தக் குரலிருக்கிறது' என்று என்னிடம் கேட்பவர்கள் பலருண்டு. இதற்காக நான் ஏதோ தனிப்பட்ட முறையில் மருத்துவம் செய்து கொள்ளுகிறேன் என்றும், குரலை நெறிப்படுத்தும் முறை கையாள்கிறேன் என்றும் பலர் என்னிடம் கேட்டதுண்டு. எவ்விதக் கட்டுப்பாடுமில்லாமல் கண்டதையெல்லாம் உண்டு வாழும் எனக்கு இந்தக் குரல் இன்னும் இருக்கின்ற தென்றால் அது என்னுடையதன்று. அரசங்குடி சரவண முதலியாருக்கு 1916ல் மகனாகப் பிறந்த நான் பெற்றிருந்த குரல் யாழ்ப்பாணத்தில் 1955ல் இழக்கப்பட்டது. அந்தப் பெருமகனை சந்தித்த பிறகு இன்றுவரை நான் பேசும் குரல் அப்பெருமகன் இட்ட பிச்சையாகும். எனவே இதில் ஆச்சரியப்படுவதற்கோ, பெருமை அடைவதற்கோ ஒன்றுமில்லை. இந்த மகான்களின் திருவருள் எத்தகையவர்களையும் காக்கும் திறன் உடையது என்பதை இது பறைசாற்றி நிற்கின்றது.

மேலே கூறிய மூன்று நிகழ்ச்சிகளும் என்னோடு நேரடித் தொடர்புடையவை. இனிக் கூறப்போகும் நிகழ்ச்சிக்கும் எனக்கும் நேரடித் தொடர்பில்லை. சுவாமிகளிடம் மாபெரும் பத்தி பூண்டிருந்த யாழ்ப்பாண நண்பரொருவர் அவருடைய வாழ்க்கையில் நடந்ததைக் கூறினார். அதைப் பிறரிடம் சொல்லும் பழக்கம் அவரிடமில்லை. ஆனால் என் அனுபவங்களை அறிந்த பிறகு அவருடைய அனுபவத்தை என்னிடம் சொல்வதில் தவறில்லை என்று கருதிக் கூறினார். இப்போது பெரிய பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அந்த நண்பரும் இல்லை. சுவாமிகளும் இல்லை. எனவே அப்படியே தருகின்றேன். நண்பர் கூறியதை சொல்லப் போகிறேன்.

"அ. ச. ஐயா, பிறரிடம் இது பற்றிப் பேசத் தேவையில்லை. மனசுக்குள் வைத்துக் கொள்ளுங்கள். சுவாமிகளின் மாபெரும் ஆற்றலுக்கு ஓர் உதாரணம், ஒருமுறை யாழ்ப்பாணம் சென்று சுவாமிகளைத் தரிசித்த பொழுது சிரித்துக் கொண்டே 'மகனே சிவனொளி பாதம் போய் வரலாமோ' என்று கேட்டார். நான் கொஞ்சம் அஞ்சினேன். மலையின் மேலிருக்கும் அந்த இடத்திற்கு செல்வதற்கு சரியான பாதையொன்றும் அப்பொழுது இல்லை. பாறைகளைக் கடந்து தாண்டிக் கொண்டு செல்லவேண்டும். சுவாமிகளோ முதிர்ந்த பருவத்தினர். என்ன செய்வது என்று திகைத்து இறுதியில் ஒப்புக் கொண்டேன். அந்த மலையின்மேல் ஏறிச் செல்வதானால் போகவரவே பல மணிகள் ஆகும். வழியில் சாப்பிடுவதற்கு ஒன்றும் இராது. எனவே ஒரு சட்டி நிறைய இடியப்பமும் சொதியும் தயார்செய்து காரின்



பின்புறம் வைத்துவிட்டு சுவாமிகளும் நானும் மலையடிவாரம் போய்ச் சேர்ந்தோம்.

அங்கே காரில் இருந்து இறக்கிய இரண்டு பாத்திரங்களையும் பார்த்து 'என்ன மகனே இது' என்று கேட்டார்கள். மதிய உணவிற்காக என்று நான் கூறியவுடன் கடகடவென்று சிரித்த சுவாமிகள் 'போகும் வழியில் பாதி தூரத்தில் அழகான டீக்கடை இருக்கிறது. வேண்டுமான பண்டங்களை வாங்கிச் சாப்பிடலாம், குடிக்கலாம்' என்றார்கள். எனக்கு தலை சுற்றியது. ஏதோ இரண்டொருவர் தவிர வேறு யாரும் அந்த மலைமீது ஏறிச் செல்வதில்லை. அந்த வழியில் யாரை நம்பி, எந்தப் பைத்தியக்காரன் டீக்கடை வைத்திருப்பான். என்று நான் நினைத்தாலும் சுவாமிகளிடம் எடுத்துச் சொல்லும் துணிவு எனக்கு இல்லை. ஆனாலும் சுவாமிகள் நான் கொண்டுவந்த உணவை வண்டியிலேயே வைத்து விடுமாறு பணித்தார்கள். வேறு வழியில்லாமல் அரைமனத்துடன் வண்டியிலேயே உணவை வைத்துவிட்டு இருவரும் மலையேறினோம். பாதிவழி சென்றதும் ஓர் அற்புதக் காட்சி, என்னென்று சொல்வது ?

பாண், ரொட்டி, பலகாரங்கள் இவை அனைத்தும் வைக்கப்பட்டிருக்கும் ஒரு டீக்கடை அங்கே இருந்தது. 'பார்த்தாயா மகனே, வேண்டுமானதைச் சாப்பிட்டுவிட்டு மேலே போகலாம்' என்றார் அந்த மகான். இருவரும் உண்டுவிட்டு மேலே சென்றோம். மீண்டு வரும்பொழுதும் அதே டீக்கடையில் மறுமுறையும் சாப்பிட்டு, குடித்துவிட்டு கீழே வந்துவிட்டோம். இதுவரையில் இல்லாத பெட்டிக்கடை அங்கே எப்படி வந்திருக்கும். அவ்வளவு பலகாரங்கள் அங்கிருந்தும் எங்களைத் தவிர வேறுயாரும் அங்கில்லையே, அக்கடைக்காரன் யாரை நம்பி இவ்வளவு பலகாரங்களையும், கடையையும் வைத்திருக்கிறான் என்ற எண்ணம் என் மனத்தை உலுப்பிக் கொண்டிருந்தது. சுவாமிகள் சிரித்துக் கொண்டே 'பார்த்தாயா மகனே, இந்த இடியப்பத்தையும் சொதியையும் சுமந்து செல்ல வேண்டிய வேலையே இல்லாமல் போய்விட்டது. பார்த்தாயா?' என்றார்கள்.

சுவாமிகளைக் கொண்டு போய் யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டு கொழும்பு மீண்ட எனக்கு மனத்தில் அமைதி ஏற்படவில்லை. இரண்டு நாட்கள் கழித்து உற்ற நண்பர் ஒருவரை அழைத்துக் கொண்டு சிவனொளி பாதம் போய்ச் சேர்ந்தேன். நண்பரிடம் இதைப் பற்றி ஒன்றும் நான், சொல்லவில்லை. டீக்கடை இருந்த இடத்தின் அடையாளம் நன்கு தெரிந்து வைத்திருந்தேன். அப்படி ஒருகடை அங்கிருந்த சுவடுகூடத் தெரியவில்லை. நான் சுற்றுமுற்றும் பார்ப்பதைப் பார்த்த நண்பர் 'என்ன பார்க்கிறீர்கள்' என்று கேட்டார். இங்கு ஒரு டீக்கடை இருந்ததாக ஞாபகம், அதனாற்தான் அது எங்கே போய்விட்டது என்று தேடுகிறேன் என்றேன். நண்பர் சிரித்து விட்டு, 'இந்த இடத்தில் டீக்கடையா? முழுப் பைத்தியமாக இருந்தால் கூட இந்த இடத்தில் டீக்கடையைத் தேடமாட்டாய். மனித நடமாட்டமே இல்லாத இந்த இடத்தில் எந்தப் பைத்தியக்காரன் டீக்கடை வைப்பான்? வா போகலாம்' என்று அழைத்துப் போனார்.

அந்த நண்பரிடம் நடந்தது எதனையும் நான் சொல்லவில்லை. காரணம் அதனைப் புரிந்து கொள்ளும் பக்குவம் அவருக்கில்லை என்பதை நான் அறிந்து இருந்ததால், அவரிடம் ஒன்றும் கூறவில்லை. அ. ச.ஐயா, மகானின் திருவருளுக்கு தாங்கள் பாத்திரமானது போல நானும் பாத்திரமாயினேன்" என்று கூறி மெய்சிலிர்த்தார். அன்று இரவு கொழும்பில் பேசும்பொழுது இந்த நிகழ்ச்சியைச் சொல்லாமல், திருப்பைஞ்ஞீலியில் நாவரசர் பெருமானுக்கு இறைவன் கட்டமுது அளித்ததையும், சுந்தரர்க்கும் அவ்வாறே அளித்ததையும் கூறிவிட்டு முடித்தேன். இதில் வியப்பொன்றுமில்லை. "விச்சது இன்றியே விளைவு செய்குவான்" ஆகிய இறைவன் திருவிளையாடலில் இது சாதாரண நிகழ்ச்சி. இதுபோன்ற நிகழ்ச்சிகளை அனாயாசமாக செய்துகாட்டும் மகான்கள், சித்தர்கள் இப்பொழுதும் இருக்கிறார்கள். நல்வினை உடையவர்கள் அவர்களைக் கண்டு ஆசிபெற முடியும்.

அருளாளர்கள் என்பவர்கள் எப்போதும், எல்லா இடங்களிலும் இருந்துகொண்டு, இறைவன் கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களை இனங்கண்டு கொள்வதும், காண்பதும், அவர்களுடைய அருளாசிகளைப் பெறுவதும், பல பிறப்புக்களிலும் நாம் செய்த புண்ணியத்தின் பயனே ஆகும். "கந்துக மக்கரியை வசமாய் நடத்தலாம்" என்று முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தாயுமானவப் பெருந்தகை கூறியதை 1955லும் செய்து காட்டும் அருளாளர்கள் இருக்கிறார்கள் என்பதை பறைசாற்றவே! இப்பெருமகனாருடைய வாழ்வில் அவர் நிகழ்த்திய நான்கு அற்புதங்களை மேலே கூறியுள்ளேன். அப்பெருமானின் அருளாசி அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்று அவருடைய திருவடிகளில் வணங்கி நிற்கின்றேன்.

**திருச்சிற்றம்பலம்**

**சுவாமிகளின் வரலாறு முடிவுற்றது**

**ஆக்கம் - பேராசிரியர் அ .ஞானசம்பந்தர்**
**தொகுப்பு - சிவத்திரு.வடிவேலு கங்காளன்**

## ஈழத்து சித்தர்கள் : தவத்திரு அருளம்பலம் சுவாமிகள்

**(07ஆம் பக்கத் தொடர்ச்சி)**

**ஆரண மாகம மாய கலைகளு மம்புயலும்**
**நாரண வானவர் நாதாரி யானும் பவமொழிதற்**
**காரண மேனிய னாயெழ கண்ணுத வான்கதவுட்**
**பூரண னாமரு ளம்பல வெந்தையைப் போற்றுவமே**

ஈழத்து சித்தர்களில் முதன்மையானவர் கடையிற் சுவாமிகள். அந்தச் சித்தர் குருபரம்பரையில் 4வது சித்தர் (கடைசி) அருளம்பலம் சுவாமிகள். சுவாமிகள் சமாதி அடையும் முன் தனது பிள்ளைகளிடம் தான் இறைவனிடம் செல்வதாகவும் தனது உடலில் இருந்து ஆன்மா விலகுவதாகவும், இவைகளிட்டு நீங்கள் கவலைப்படவோ, கண்ணீர் சிந்தவோ, கூடாது என்றார். தனது சமாதியை முற்கூட்டியே தெரிவித்து தேகவியோகமானார்.

குறிப்பு:- ஒருநாள் அதிகாலை (வெள்ளிக்கிழமை) 4 மணியளவில் எனது நெற்றியில் சுவாமிகளின் கைபரிசத்தை பெற்றேன். அதன் பிறகுதான் அவருடைய சரிதத்தை எழுதுவதற்கு முயற்சிகள் எடுத்தேன். தான் இருப்பதாக எனக்கு- உணர்த்தியுள்ளார். திருநீற்றுக் கையை உணர்ந்தேன். இது எனது வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பேறாக உணர்ந்தேன். அவரின் அருளால்தான் இவற்றை வெளிக்கொணர முடிந்தது. சித்தர்கள் தாங்கள் நினைத்தால் தான் தங்களை வெளிப்படுத்துவர்கள்.

**சிவத்திருமதி. துஷ்யந்தி சிறிகரன்**
**(அருளம்பலம் சுவாமிகளின் பூட்டி)**

**அடியார் பெருமையின் ஆவண ஊற்று பெரியபுராணம்**

# பாண்டி நாட்டில் சைவம் உய்ய வைத்த தெய்வப்பாவை மங்கையர்க்கரசியார்



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

தாமரை போன்றத் திருவடிகளையுடைய சிவபெருமானுக்கு அடியவராய் இருப்பது பெருமை. சைவநெறியில் ஒழுகி, அன்புடை நெஞ்சகராய் நிலைப்பது பிறவிப்பயனையடைய வழிவகுக்கும். அப்படிப்பட்ட சைவநெறியின் சிறந்த நாடாகவும், அங்கயற்கண்ணி அம்மையுடன், ஆலவாய்ச் செந்தமிழ் சொக்கநாதப் பெருமானே, ஆட்சி செய்த பெருஞ்சிறப்புடையது பாண்டிய நாடாகும். இறைவனுக்கு பழம்பதியாவது பாண்டியநாடு என்பதை மணிவாசகரும்,

**“மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி ஆகவும்”** என்கின்றார்.

அப்பேற்பட்ட சைவநாடு, திருநீற்று ஒளி வீசும் தென்பாண்டி நாடு, சமண இருள் சூழ்ந்து மங்கிப் போயிருந்தது. சைவவழியில் வந்த பாண்டியனோ சமண குழியில் வீழ்ந்திருந்தான். மன்னன் **“எவ்வழியோ மக்களும் அவ்வழியே”** என்ற வாக்கினைப் போல் நாட்டு மக்களும் சிவவழிபாடற்று இருந்தனர். இருப்பினும் தென்னாடு செய்த தவமும், பாண்டிய அரசின் முழுப்பயனும் மங்கையர்க்கரசியார் என்னும் வடிவம் தாங்கி, கன்னி நாட்டைக் காப்பாற்ற கூன்பாண்டியனை கரம்பற்றியது.

ஆம்! தென்னவன் தம் குலத்திற்கு மாபெரும் பழியை வினையின் காரணமாகத் தேடி வைத்திருந்தான். அப்பழி பாண்டிய நாட்டை சூழ்ந்திருந்தது. அப்பழியை நீக்க வந்தமையால் அம்மையாரை அவ்வாறு சிறப்பித்து மகிழ்கின்றேன்.

ஒரு பெண் நினைத்தால் எதையும் செய்ய இயலும். ஒரு தாயானவள் தன் குழந்தை நோயவாய்ப்படும் போது, எப்படியாயினும் மருந்து தேடி அதனைத் தீர்ப்பாளோ, அதுபோலவே கூன்பாண்டியனைக் கரம்பற்றியதால், பாண்டிய நாட்டைப் பெற்றவராயினர் மானியார். எனவே அதன் நிலை தாழ்ந்திருந்தது. அதனை நிமிர்ந்து நிலைபெறச் செய்யவே, காழிப்பிள்ளையார் வருகையை எதிர்நோக்கி காத்திருந்தாள் கன்னி நாடாள்

திருமறைக்காட்டிற்கு சென்று மழுவிடைக்கன்றை, பாண்டிய நாட்டிற்கு வர அழைப்பு விடுக்கப்பட்டது. பிள்ளையாரும் மலர்ந்த முகம் தந்து, பாண்டிய நாட்டிற்கு நீற்று ஒளி மிளிர அடியார்கள் புடைசூழ எழுந்தருள்கின்றார்.

பாண்டிய நாடு செய்த தவம், ஆலவாயை அலங்கரித்துக் கொண்டு வந்தது முத்துச் சிவிகை. குலச்சிறையார் வீழ்ந்து வணங்கி வரவேற்றார். பிள்ளையார் ஆலவாய் பெருமானின் அடி வணங்க ஆலயம் சென்று, பதிகம் பாடி வலம் வருகின்றார். அவ்வேளையில் தான் மானியாரைச் சந்திக்கிறார் ஞானமாமுனிவர் சம்பந்தர். அந்தக் காட்சியைத் தெய்வச் சேக்கிழார் பெருமான் காட்டுகையில்,**“ஒரு மருங்கு ஒதுங்கும் தெள்ளுநீர் விழித் தெரிவையார்”** எனக் கூறுகின்றார்.

சென்று முன்பு அம்மையாரை, குலச்சிறையார், சம்பந்தரிடம் அடையாளப்படுத்துகின்றார். உடனே பிள்ளையார் பெரும் களிப்புடன் விரைந்து அம்மையாருடன் செல்கின்றார். இருக்கும் தானே சம்பந்தர் பிறப்பதற்கு இவரின் தவமும் காரணமல்லவோ, ஆம் சைவம் வாழ பலரின் தவமே சம்பந்தரை அவதரிக்கச் செய்தது, அதில் மானியாரும் ஒருவர்.





எப்பேற்பட்ட நன்மைகளையும் செய்துவிட முடியும் என்பதற்கு அம்மையார் மிகப்பெரிய சான்றாவார். மானியார் வளவர் குலத்தில் தோன்றியவர். பெருமானை நாளும் போற்றிப் பரவும் திறமுடையவர். ஆனால் திருமணமாகி வந்ததோ பாண்டிய நாடு, சைவ நாடுதான் இருப்பினும் சமண சூழ்ச்சியால் வீழ்ச்சியில் இருந்தது. ஆட்சியில் இருந்த மன்னனும் அதற்கு சாட்சியாய் இருந்தான். மன்னன் என்னதான் சமணில் பிறழ்ந்து இருந்தாலும், மானியார் நடவடிக்கைகளில் தலையிடாமல் அன்புடன் இருந்தான். அதுவே அவனின் செய்தவமாகும்.

ஒரு பெண் திருமணமாகி சென்றவுடன் நல்ல கணவன், குடும்பம், செல்வ செழிப்பான வாழ்வு என இருந்தால் போதும் என்ற மனநிலையில் இருப்பது இயல்புதான். அம்மையார் பாண்டிய நாட்டிற்கே பேரரசியாக இருந்த போதிலும் பதைத்துக் கொண்டுதான் இருந்தார். எப்படி மீண்டும் நம்நாடு ஒளி பெறும் சைவம் வலுப்பெறும் என்று.

அந்த வேளையில்தான் சைவமும், தமிழும், செய்த தவப்பயனும், மிகுசைவத்துறை விளங்கவும், திசையனைத்தின் பெருமை எல்லாம் தென்திசையே வென்றேறவும், அசைவில் செழும் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்லவும், நஞ்சணி கண்டனின் திருமகனாக வந்து தோன்றி பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருந்தார் சிவக்கன்றான காழிப்பிள்ளையார்.

இதனைக் கேள்வியுற்ற மானியார், தனக்கு பக்கபலமாக சைவநெறியில் நின்ற அமைச்சரான குலச்சிறையாரிடம் கூறி, அவரை பாண்டிய நாட்டிற்கு எழுந்தருள வேண்டுகின்றார்.

அம்மையார், சம்பந்தரை வீழ்ந்து, வணங்கி கண்களில் நீர் அருவி பொழிய, உரோமம் சிலிர்த்து உரை தடுமாறிக் கூறுகின்றார். சேக்கிழார் வாக்கில் காண்போம்.

**“யானும் என் பதியும் செய்த தவம் என்கொல் என்றார்“**

அதற்கு காழி வாழ வந்தருளிய, கவணியர் பிரான் மறுமொழி கூறுகின்றார்.

**“சூழும் ஆகிய பர சமயத்தினர் தொண்டு வாழும் நீர்மையீர் உமைக் காண வந்தனம்“** என்றார்.

சிவ! சிவ! எப்பேற்பட்ட பதில் அம்மையாரை, எந்த அளவிற்கு சம்பந்தர் போற்றி மதிக்கின்றார். என்பதற்கு சான்றான வரிகள். மேலும் சம்பந்தர், அம்மையாரைப் பற்றி, பதிகமே பாடியது இன்னும் பெரும் சிறப்பாகும். அப்பதிகம்,

**“மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே“**

திருமடத்தில் தங்கிய நேரத்தில், சமணர்கள் அங்கு மன்னனிடம் ஆணை பெற்று தீ வைக்கின்றனர். அவ்வேளையில், மன்னன் கவலையில் இருக்கின்றான். அம்மையார் கனிவுடன் சென்று, வினவ மன்னனும் காழி நகரிலிருந்து வந்த குழந்தையால் அடிகள்மார்கள் (சமணர்கள்) “கண்டு முட்டு கேட்டு முட்டு“ என திகைக்கின்றார்கள் என்றான். அம்மையார் பொதுவாகவே சொல்கின்றார். வாதில் யார் வெல்கின்றார்களோ, அவர் பக்கம் சேர்வதே உறுதி என்கிறார். இனி அம்மையாருக்கு பயமில்லை, ஏனெனில் வந்தது சிவக்கன்றாயிற்றே.

சமணர் இட்டத் தீயை அடியவர்கள் அணைத்தனர். சம்பந்தர் ஆலவாய்ப் பெருமானின் விண்ணப்பிக்கின்றார். அப்பாடல்,

**“செய்யனே திருஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்றருள் செய்யென
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே”**

இதில் சிறப்பு என்னவென்றால் ‘பையவே சென்று‘ என்பதுதான். ஏன் இப்படி பாடினார் என்பதை தெய்வச் சேக்கிழார் பெருமான் விவரிக்கின்றார்.

**“பாண்டிமா தேவியார் தமது பொற்பில் பயிலும்
நெடு மங்கல நாண் பாதுகாத்தும்
ஆண் தகையார் குலச்சிறையார் அன்பினாலும்.
அரசன்பால் அபராதம் உறுதலாலும்
மீண்டும் சிவநெறி அடையும் விதியினாலும்
வெண்ணீறு வெப்பு அகலப் புகலிவேந்தர்
தீண்டியிடப் பேறு உடையன் ஆதலாலும்
தீப்பிணியைப் பையவே செல்க** என்றார்.

எவ்வளவு அற்புதமான பாடல் அல்லவா. அப்படியென்றால் மன்னனையும் காத்து, நாட்டையும் காத்து, சம்பந்தப் பெருமானின் குருவருளைப் பெற்ற சிறப்புடையவர், மங்கையர்க்கரசியார் ஆவார்.

அதன் பிறகு அனல் வாதம், புனல்வாதம் செய்து சைவத்தை மீண்டும் பாண்டிய நாட்டில் ஓங்கச் செய்தனர். இத்தகைய பெரும் செயலுக்காய் வந்து தோன்றியவர், மானியார். பாண்டியனுக்கு வாழ்க்கைத் துணையாய் வந்து, சைவவழித் துணையாய் இருந்தவர் அம்மையார்.

பாண்டிய நாடு உற்ற பழியை நீக்கி ,மீண்டும் வாழச் செய்தார். தன் குலத்தை காப்பது குலதெய்வம் அம்மையாரும், பாண்டியக் குலத்திற்கு ஏற்பட்ட பழியைத் தீர்த்ததால், தெய்வச் சேக்கிழார் பெருமாள்,

**“மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மாறி
செய்கமலத் திருமடந்ஜ்த கன்னி நாடான்
தென்னர் குலம் பழிதீர்த்த தெய்வப்பாலை
எங்கள்பிரான் சண்பையர் கோனருளினாலே
இருந்தமிழ் நாடுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரை
போற்றுவார் கழல்எம்மால் போற்றலாமே“**

என்று சிறப்பித்து பாடுகின்றார். இங்கு எங்கள் தெய்வம் என்பது சைவர்களாகிய நமக்குக் குலதெய்வம் என்பதாகும். எனவே குல தெய்வமாகிய மங்கையர்க்கரசியார் மலரடியைப் போற்றுவோம். சைவ நல் நெறியில் நின்று, நீறு பூசிய மேனியராய் திருமுறை பாடும் வாயினராய், வாழல், வாழ்வின் முதலாய அரனை நினைந்து வாழ்வோம் ! உய்வோம்!

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி - ஆரயம்பதி கோயில் குளம் காசிலிங்கேசுவரர் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



மட்டக்களப்புத்தேசத்தின் சைவத்தொன்மைக்கும் அதன் பண்பாட்டு மரபுகளின் தனித்துவத்திற்கும் இலக்கணமாய் விளங்கும் திருக்கோயில்களில், இன்று முற்றாக அழிக்கப்பட்டு, 2014 ஆம் வருடம் தேசிய தொல்பொருள் திணைக்களத்தினால் தேசிய புராதன இடம் என்று அறிவிக்கப்பட்ட ஆரையம்பதி கோயில் குளம் காசிலிங்கேசுவரர் சிவனாலயம், உலகநாச்சி வரலாற்றோடு தொடர்புடைய பண்டைய கோயிலாகும். சைவர்களின் புண்ணிய தலமான காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட இலிங்கம், நிலைப்படுத்தல் செய்யப்பட்டமையால் இங்குள்ள மூர்த்திக்கு காசிலிங்கேசுவரர் என்ற திருப்பெயருடன் மண்முனைப் பிரதேசத்தவரால் போற்றப்பட்டும் வந்துள்ளது.

### இயற்கை அமைவும் கோயில் வரலாறும்

மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கே மண்முனை பற்று பிரதேசத்தினுள் ஆரையம்பதியில் கோயில் குளம் எனும் பண்டைய கிராமத்தில் இச் சிவனாலம் அமைந்துள்ளது. ஆரையம்பதி, கல்விக்கும் கலைக்கும் புகழ்பூத்த இடமாகும். இவ்வூரின் சிறப்பிற்கு அணிகலன்களாக பிரதான வீதியில் அலங்காரமாக நிறுவியுள்ள உலகநாச்சி, கலிங்க மாகோன், விபுலானந்தர் ஆகியோரின் சிலைகள் தக்கசான்றாகும்.

கோயில் குளம் காசிலிங்கேசுவர கோயிலின் தொன்ம வரலாற்றினை **'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்'** எனும் இலக்கியத்தினுடாகவும், அக் கோயிலின் அகழ்வுகளின் போது கிடைத்துள்ள தொல்லில் சான்றுகள் மூலமாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படும் கோயிலின் வரலாறு, காசிலிங்கேசுவரர் கோயிலாக இருக்க வாய்ப்பிருக்கின்றது.

குணசிங்கன் மட்டக்களப்பைக், கலி பிறந்து மூவாயிரத்து ஐந்நூறாம் வருடம் பரிபாலித்து வரும் காலம், கலிங்க ஒறிசா தேசத்தை ஆட்சி செய்யும் குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள், கௌதமபுத்தருடைய தசனத்தை எடுத்து, நெடுங்கூந்தலுக்குள் மறைவாய் வைத்துக், கைலயங்கிர குகவம்சத்தார் முற்காலத்தில் வைத்த சிவலிங்கத்தையும் எடுத்து கொண்டு, தனது சகோதரன் உலக நாதனிடமும், தனது தந்தை குகசேனனிடமும் விடைபெற்று, வர்த்தகருடைய படகிலேறி, மணிபுரத்தி லிறங்கி, விசய துபீபத்தில் வந்து, மேகவண்ணைக்கண்டு, குலம் கோத்திரமெல்லாம் விளங்கப்படுத்திப், புத்தருடைய தசனத்தை கொடுத்தாள்.

மேகவண்ணனும் புத்த மதத்துக்கு இனி அபயமில்லை என்று அதிக சந்தோசம்கொண்டு, உலக நாச்சியை நோக்கி, உமக்கு வேண்டியதைக் கேளுமென்றும் கேட்டான். உலகநாச்சியும் அரசனிடம் இந்த இலங்கையில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத கிராமமொன்றீயும் படி வேண்டினாள். அதைக் கேட்ட மேகவண்ணன், மட்டக்களப்பை அரச புரியும் குணசிங்கன் தனது சினேகிதனாதலால் ஒரு திருமுகம் வரைந்து, அதில் உமது மட்டக்களப்பு உன்னரசகிரி, இவைகளில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத பதி ஒன்று, இந்த உலக நாச்சிக்கு கைலஞ்சமாய் ஈந்து கொடுக்கும் படி வேண்டி, உலக நாச்சிக்கு கொடுக்கும் உபகாரங்களையும், இரத்தின மாலையையும் கொடுத்து, மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தான்.

குணசிங்கனும் திருமுகத்தை வாசித்து, சந்ததியுரிமை கொண்டாடி, மட்டக்களப்புக்கு வடபாகமாயுள்ள அம்பிலாந்துறைக்கப்பால், மண்ணேறிமுனை வளர்ந்து, காடு செறிந்து, குடிவாழ்வற்ற பகுதியாய் விளங்கியது. அந்த இடத்திற்கு குடிகளை அனுப்பி வெட்டிதூர்த்து, மாளிகை உண்டாக்கி, உலகநாச்சிக்கு வழங்கினான். உலகநாச்சியும், குடிவாழ்ந்து சில காலம் சென்றபின் தனது தம்பி சிவநாதனை, மந்தையிடத்தில் அனுப்பிக், குகன் குடும்பம் நூற்றாறும், சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்து, குகன் குடும்பங்களைத் தன் அருகாய் தங்க வைத்து, இந்த இடத்தில் ஆலயமியற்றிச் சிவலிங்கத்தை நிலைப்படுத்தி, வணங்கி வந்தனர்" இவ்வரலாற்றின் எச்சமிச்சம் மகாவம்சத்திலும் குறிப் பிடப்பட்டுள்ளது.

இவ் வரலாற்றோடு ஒட்டிய செய்தி ஒன்றை தமிழ்மணி சிவ.விவேகானந்த முதலியார் குறிப்பிடுகையில் "உலக நாச்சி மண்முனை பிரதேசத்தை ஆட்சி புரியும் காலத்தில், வேடனோருவன் கொக்கட்டிச்சோலைக் காட்டை வெட்டும் போது, ஓர் கொக்கட்டி மரத்திலிருந்து உதிரம் பாய்ந்தது. இச் செய்தியை உலக நாச்சிக்கு அறிவிக்க, அவள் காசிலிங்கேசுவர் ஆலயத்திலிருந்து சூலம், மணி, தீபக்கால் மற்றும் பூசைப்பொருட்களுடன் திருவோலக்கர் வீரசைவக்குருமாருடன் கொக்கட்டிச் சோலைக்கு வந்தாள்.

உதிரம் பாய்ந்த இடத்தை பார்த்த போது, அவளது கண்ணுக்கு சிவலிங்கம் ஒன்று காட்சி கொடுத்தது. அவ்விடத்தில் கொத்து பந்தல் அமைத்து, பூசை செய்து திரும்பினாள். அவ்விடத்தில் காலப்போக்கில் ஒரு கோயிலை அமைத்தாள். ஒவ்வோரு வருடமும் காசிலிங்கேசுவரர் ஆலயத்திலிருந்து, சூலங்கொண்டு சென்று, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் கோயிலில் திருவிழாவை ஆரம்பித்து வைத்தாள். அவள் காலத்தின் பின்பும் அவ் வழக்கம் இருந்தது என்கின்றார். இவரின் கருத்துப்படி கொக்கட்டிச்சோலை சிவன் கோயிலுக்கு முன்பிருந்த மூத்த கோயிலே காசிலிங்கேசுவரம் என்பது உண்மையாகிறது.

### திருக்கோயில் வரலாற்றுச் சான்றுகள்

1627 ஆம் வருடம் 'அசவிடோ' என்றும் போர்த்துக்கேய தளபதியால் முற்றாக இவ்வாலயம் அழிக்கப்பட்டது. இன்று ஆரயம்பதியின் தெற்கே இவ்வாலயம் அமைத்த பகுதி மண்மேடாகக் காட்சியளிக்கின்றது. 1988, 1989 ஆம் வருடங்களில், இவ்விடத்தில் மணல் அகழ்வு செய்யப்பட்ட போது, ஒரு சிவாலயம் இருந்தமைக்கான ஆதாரம் கிடைத்துள்ளது.

செங்கற்களை கொண்டு, அகலமாகப் போடப்பட்டுள்ள அத்திபாரத்தின் பாகங்கள், சிறிய படிகலிங்கம், ஐந்து தலை நாகத்தின் கீழ் உள்ள திருமால் சிலை, பூசனைகளிக்கு பயன்படுத்தப்பட்ட பெரிய விளக்கின் உதிரிப்பாகங்கள், காண்டாமணி, ஒரு வெள்ளைக் கல்லின் செதுக்கப்பட்ட ஆனைமுகனின் புடைப்பு சிற்பம், 15 அடி அங்குல சதுரமும் 12 அடி உயரமும் கொண்ட கருங்கற்தூண்கள். (இத்தூ ண்கள் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலில் வைத்துக்கட்டப்பட்டுள்ளது), மற்றும் ஆலயத்தின் முன்பு நீர்ச்சுனையாகக் காணப்பட்ட தீர்த்தக்குளம் இருந்தமைக்கான தடயங்கள் ஆகிய தொல்லில் எச்சங்களி லிருந்தும், இங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் கிராமவாசிகளின் வாய்மொழிக் கதைகள் மூலமாகவும், கோயில் குளத்தில், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சிறப்புக்களுடன் சிகரத்துடன் கூடிய ஈசுவரன் ஒன்று அமைந்திருந்து, போர்த்துக்கேயரின் அழிவைத் தொடர்ந்து, யாரும் கவனிப்பாரின்றி அழிந்த விட்டது என்பது, உண்மை என்பதை பறைசாற்றி நிற்கின்றது.

இக் கோயிலின் வரலாறுகள் மேலும் அகழ்வாய்வுகள் மூலம் துவக்கப்பட வேண்டும். அழிந்த ஆலயம் அவ்விடத்தில் மீண்டும் உயிர் பெற்று எழ, எல்லாம் வல்ல சிவபெருமான் அருளாட்சி புரிய வேண்டும். மட்டக்களப்பு சைவக்கோயில்கள் பெரும்பான்மையானவை வீரசைவப்பண்பாட்டு மரபுத்



தாக்கத்திற்குட்பட்டு இருந்தவை ஆகும். உலகநாச்சியின் ஆதிக்கத்திற்குட்பட்ட கொக்கட்டிச்சோலை, வீராகமச் செல்வாக்கும் வீரசைவநெறி தழுவிய சிவன் கோயிலாக தற்போதும் திகழ்கின்றது. அதே போல் கோயில் குளத்தில் அமைந்த காசிலிங்கேசுவரர் ஆலயமும் வீரசைவநெறி தழுவியதாகவே இருந்திருக்கின்றது. இதன் எச்சத்தை இன்று ஆரயம்பதியில் வாழும் மக்களிடையே நிலவும் சமய சமூக பண்பாட்டுச் சடங்குகளில் வீரசைவத்தாக்கம் நிலவி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

இக்கோயிலின் பண்டைய இருப்பு பற்றி பேராசிரியர் சி. பத்மநாதன், க. மகேஸ்வரலிங்கம், மா. காசிப்பிள்ளை, சீ. கோபாலசிங்கம். போன்றோர் தமது கட்ரையாக்கங்களில் குறிப்பிட்டுள்ளனர். 1627 ஆம் வருடங்களில், இக்கோயில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டதை தொடர்ந்து,




அப்போது அங்கிருந்த மக்கள் குடி பெயர்ந்து, அருகில் ஆரயம்பதிக்கு சென்றனர். அங்கு சிவ சின்னமான சூலாயுத வழி பாட்டுடன் ஒரு ஆலயம் தோற்றுவிக்கப்பட்டது. பின்னாளில் அங்கு உருவான செல்வா நாகர் குடியேற்றமும், மக்களின் பத்தியாலும் சீர்மிகு சிவனேசுவரன், சிவன் கோயிலாக வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கு நுவரெலியா லங்காதீசு வரர் ஆலய காயத்திரி சித்தர் முருகெசு சுவாமி அவர்களால் சிவலிங்க நிலைப்படுத்தல் செய்யப் பட்டு, வருடம் தோறும் உற்சவம், தைப்பூசம், சிவனிரவு, திருடிவாதிரை உற்சவம், திருவெம் பாவை ஓதுதல், ஒன்ப தானிரவு (நவராத்திரி) முதலிய விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றன. இச்சிவனார் கோயில் குளம் காசிலிங்கேசுவரத்தின் மறுவிம்ப எச்சமாக இக்கிராமத்த வர்களால் பார்க்கப்படுகின்றது. தற்போது மண்முனையில் உலகநாச்சியும் காசிலிங்கமும் சிலையாக காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

**" மேன்மை கோள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."**

**திருச்சிற்றம்பலம்**

# பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி



ஆலவாய் அமுதன்

சோதி வடிவமாகி ஆதியந்தமேதுமற்று பரந்து விரிந்துள்ள பேரண்டங்கள் முழுதிலும் பரந்து விரிந்து உறைபவன் சிவபெருமான். திருமூலர் ஈசனின் முற்றுமுணர்ந்த தன்மை யான எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதை

**“காலினில் ஊதுங் கரும்பினிற் கட்டியும்**
**பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்**
**பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை**
**காவலன் எங்கும் கலந்து நின்றானே”** எனவும்,

**“விறகிற் தீயினன் பால்படு நெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச்சோதியன்**
**உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்கும்”**

என்று திருநாவுக்கரசரும், இறைவன் எங்கும் நிறைந்திருப்பதைப் பாடியருளியுள்ளார்.

ஏகபரம்பொருளும் என்றுமே நித்தியமுமான மெய்ப்பொருள் உயிர்களை கடைத்தேற்ற இர(ற)ங்கி பூவுலகிற்கு வருகையில் பற்பல வித வடிவங்கள் தாங்கி வருகின்றது. அவை ஒன்றல்ல என்பதால் அத்தனையையும் பாடும் படி மணிவாகர் தெள்ளேணத்தில்

**“ஒரு நாம ஓர் உருவம் என்றும் இலாற்கு ஆயிரம்**
**திருநாமம் பாடி நாம் தென்னேணம் கெட்டாமோ”** என தெள்ளேணம் கொட்டுகிறார்.

இத்தகு மெய்ப்பொருள் அருவ, உருவ, அருவுருவ, உருவந்தாங்கி அடியவர்களுக்கு அருள வருவதை குமரகுருபரர்
**“உருவும் அருவும் அருவுருவாக வருவ வடிவம் பலவாய்”** கசிந்துருகிப் பாடியுள்ளார்.

அத்திறம் அடியவர்கள் பொருட்டு, பல்லுருவம் தாங்கிய வடிவங்களில் விசேடமானதும் சிறப்பு வாய்ந்ததுமான ஒரு அற்புத வடிவமும் உள்ளது. அது இன்று சைவசமயத்தின் அடையாளமாயும் மிளிர்கிறது.

**“தோலும் துகிலும் குலையும் சுருள் தோடும்**
**பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கியும்**
**சூலமும் தொக்க வளையு முடைத்தென்மைக்**
**கோலமே நோக்கி குளிர்ந்தூதாய் கோத்தூம்பீ”**

என்று வாதவூர் அடிகள் காட்டும் இத்திரு வடிவத்தின் வலது பாகமானது புலித்தோல், கரும்தோலும் அணிந்து குழையை காதிற் சூட்டி, நெற்றியில் நீறணிந்து கரமதில் சூலமேந்தும் படி ஆணிற்கிலக்கணமாகவும், இடப்பாகமோ பட்டாடை புனைந்து காதிற்தோடணிந்து நெற்றியில் சாந்து பொட்டும் கையிலே வளையள்களணிந்து கிளியை ஏந்தியபடி பெண்மைக்கிலக்கணமாகவும் அமைகிறது.

இது வேறேதுமன்று **உமையருள் கூறனின் திருவடிவமே**யாகும். சிவனின்றி சக்தியில்லை, சக்தியின்றி சிவனில்லை என்பதையும் ஆணின்றி பெண்ணும், பெண்ணின்றி ஆணும்வாழுதல் சாத்தியமில்லை என்பதையும் விளக்கும் உருவமாக திகழ்கிறது. பிருங்கி முனிவர்க்காய் எடுத்தவடிவமென கூறப்படினும், இது ஆழ்ந்த விஞ்ஞானதத்துவ வடிவமாக அமைகின்றது. உலகிலே ஆண், பெண் எனும் இரு அடிப்படைப் பாலினங்கள் உண்டு. இவற்றின் அடிப்படை நிலைத்திருப்பினிலேயே பிரபஞ்சமும் இயங்குகின்றது.

ஒரு மனிதன் ஒரு தூய ஒற்றை பாலின உயிரினம் அல்ல. ஒவ்வொரு மனித உயிரினமும் ஆண் மற்றும் பெண் பாலினத்தின் திறனைக் கொண்டுள்ளது. ஆயினும் அதன் உருவாக்கதில் எப்பாலினத்தன்மை அதிகமாக உள்ளதோ அப்பாலினமே ஆதிக்கம் செலுத்தும். இரண்டு வகையான சுரப்பிகள், இரு பாலினத்திலும் சுரக்கப்படுகின்றன. இவ்வடிப்படையில் ஆண், பெண் பாலின பண்புகளும் சமமாக ஒருங்கிணைந்த திருவுருவமாக அம்மையப்பனாக அருளும் மாதொருபாக வடிவம் இருமைக்கு அப்பாற்பட்ட முழுமையான முப்பாலினத்தன்மையுடன் விளங்குகின்றது. இறைவன் அணுவாக இருக்கையில் நியுத்திரனாக உமையும், புரேத்திரனாக சிவனுமாகி ஒன்றாகி உயிர்களை கடைத் தேற்றுகிறான்.

ஆஸ்திரிய இயற்பியலாளரான ‘எர்வின் சுரோடிங்கர்’ என்பவரால் வடிவமைக்கப்பட்ட ஒரு சிந்தனைச் சோதனையும், மாதொருபாக வடிவத்தையே காட்டுகிறது. இச்சோதனையில் உயிருள்ள பூனை ஒன்று ஓர் எஃகு (இரும்பு) அறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வறையில் நீரில் ஐதரோசயனைடு (HCN) கரைந்த ஐதரோசயனைடுக் காடி, மூடிய ஒரு குழற்குப்பியில் உள்ளது. இக்காடி வெளி வந்தால் அதில் இருந்து வரும் வளிமம் அல்லது ஆவியால் பூனை உயிரிழக்கும். அந்த அறையினுள் மிகமிகச் சிறிதளவு கதிரியக்கப் பொருள் ஒன்று ஓரிடத்தில் உள்ளது.

சோதனை செய்யும் காலத்தில் ஒரேயொரு அணு சிதைவுற்றாலும் ஓர் உணர்வியின் உதவியால் இயங்கி ஒரு சுத்தியல் சுழன்று அடித்து குழல்குப்பியை உடைத்து விடும். எனவே அதில் இருக்கும் ஐதரோசயனைடுக் காடி பூனையைக் கொன்றுவிடும். ஒரு பார்வையாளரால் அப்படி ஓர் அணு சிதைந்து சுத்தியல் அடிபட்டு, குழற்குப்பி உடைந்து, ஐதரோசயனைடுக் காடி வெளியேறி, பூனை இறந்ததா அல்லது இறக்கவில்லையா என்று அறிய முடியாது. இப்படி ஒரு பார்வையளரால் அறிய முடியாததால் குவாண்டம் இயங்கியல் விதியின் நேரடுக்குப் பண்பின் படி பூனை உயிருடனும் உயிரற்றும் ஆகிய இருநிலைகளும் சேர்ந்துள்ள நிலையில் உள்ளது எனும் முரண்தரும் முடிவுக்கு வரவேண்டும்.

ஆனால் அந்த எஃகு அறையை உடைத்துப் பார்த்த பின் தான் பூனை உயிருடன் உள்ளதா அல்லது உயிரற்றுக் கிடக்கின்றதா என்பதை அறிய முடியும். ஆனால் அப்படிச்





செய்யும் பொழுது குவாண்டம் இயங்கியல் விதியின் நேரடுக்குப் பண்பு அறுபடுகின்றது. எனவே இரண்டில் ஒரு நிலையிற்றான் காண முடியும். அதாவது பார்வையாளர் அது என்ன நிலையில் உள்ளது என்று அறிய முற்படும்பொழுது, உண்மையாக உள்ள நிலை கெடுகின்றது. பார்வையிடுதல் உள்ள நிலையை மாற்றுகின்றது என்னும் கருத்துக்கு இது ஒரு எடுத்துக் காட்டாகக் கொள்ளப் படுகின்றது.

எவ்விதம் சுரோடிங்கரின் பரிசோதனையானது பூனை உயிருடன் உள்ளதா அல்லது உயிரற்றுக் கிடக்கின்றதா என இருநிலையும் கலந்திருப்பது போல இறைவன் அம்மையப்பனாக அருளும் மாதொருபாக வடிவம் சிவனும் சக்தியும் ஒன்றே, ஆயினும் அவர்கள் வேறுபட்டவர்கள் என இருமைக்கப்பாற்பட்ட உருவாய் மிளிர்கிறது. சுந்தரமூர்த்தி இறைவன் முப்பாலினாக அருளுவதை **“பெண்ணோ டாணலியாய்ப் பிறவாவுருவானவளே”** எனப் போற்ற, வாதவூரடிகள் **“பெண்மையனே தொன்மை யாண்மையனே அலிப்பெற்றியனே”** என இன்றைய விஞ்ஞானமே இறைவன் என்பதை பாடியுள்ளார்.

சமூக நோக்கில் இன்றும் தொடர்ந்து வரும் பிரச்சினை பால் ரீதியான சமத்துவம், பால் ரீதியில் ஒற்றுமையையும் சமத்துவத்தையும் கட்டிக்காத்தாலே மேன்மையுற முடியும். உலகும் நன்முறையில் இயங்கிட முடியும் என்பதையும் உணர்த்தவே மெய்பொருள் தன் மெய்யில் மங்கையுருவையுமேந்தி அருள்பாலிக்கின்றான்.

சங்க இலக்கியமான அகநானூறு இறைவனின் சமத்துவ வடிவினை இயற்கையில் காண்பிக்கின்றது.

**“வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து**
**உருவுடன் இயைந்த தோற்றம் போல**
**அந்தி வானமோடு கடலணி கொளா அ**
**வந்த மாலை பெயரின் மற்றிவள்**
**பெரும் புலம் பின்னே தெய்வ அதனால்”**

என நீலநிறக்கடலை அம்மையாயும், செக்கச்சிவந்த வானத்தை அப்பனாகவும், கண்டு இரண்டும் நெருங்கி யிருப்பதை சிவசக்திவடிவமாக போற்றுகிறது. பாலின சமத்துவத்தை இவ்வடிவம் விளக்குவதால் மதவேற்றுமைகளை எல்லாம் தாண்டி சிவனை ஏனைய மதங்களும் போற்றுகின்றன.

தேவார மூவரும் உமைபங்கன் வடிவினை மிகுதியும் போற்றிப் பாடியுள்ளனர். உயிர்கட்கு தாயாய் தந்தையாய் ஆன சிவபெருமானைத் திருஞானசம்பந்தர் **“தோடுடைய செவியன்”** என முதல் பாட்டிலேயே உமைபங்கன் வடிவினிற் கண்டுபதிகத்தைத் தொடங்கியுள்ள திறம் சிந்தனைக்குரியது. திருச்செங்கோடு மங்கைபங்கனை

**வெந்தவெண் ணீறணிந்து விரிநூறிகழ் மார்பினல்ல**
**பந்தணவும் விரவா ளொரு பாக மமர்ந்தருளிக்**
**கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச்செங் குன்றூர் ன்ற**
**அந்தணனைத் தொழுவா ரவல மறுப்பாரே**

என்று திருஞானசம்பந்தர் போற்றுவார். மேலும், **‘மாதிலங்கு திருமேனியர்’, ‘அரிவையோர் பாகமர்ந்த பெம்மான்’, ’வட்டமுலையாள் பங்கன்’, ’பெண்ணாணென நின்ற பெருமான்’, ’இமவான் மகள் பாலமருந் திருமேனி’,’பெண்ணறு உடலினர்’** எனவும் திருஞானசம்பந்தர் பாடிப்பரவியுள்ளார்.

**‘பாகம் கொப்பளித்த மாதர்’, ‘அரிவையோர் பாகர்’, ‘மங்கை தன்னை மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவம்’, ‘ஆணொடு பெண்ணுமாம் மெய்யன்’** என்றெல்லாம் போற்றும் திருநாவுக்கரசர் நற்றமிழ் பாடல் ஒன்றில் மாதொரு பாகனை நம் கண் முன்னேகாட்சிப்படுத்துகிறார்

**“புதுவிரி பொன்செய் ஓலை ஒருகா**
**தொர்காது சுரிசங்க நின்று புரள**
**விதிவிதி வேத கீத மொருபாடு மோத**
**மொருபாடு மெல்ல நகுமால்**
**மதுவிரி கொன்றை துன்று சடைபாக**
**மாதர் குழல்பாகமாக வருவர் இதுவிவர்**
**வண்ண வண்ண மிவள்வண்ண வண்ண**
**மெழில்வண்ண வண்ண மியல்பே.”**

சுந்தரர், **‘மெல்லியலைப் பாகங் கொண்டார்’, ‘மடந்தை பாகன்’, ‘மாதிடங் கொண்டவன்’** என்றவாறு உமைபங்கன் வடிவை வழுத்துவதோடு,

**“கோசிகமும், அரையில் கோவணமும், அதளும்**
**அற்று இகழ் திண்புயமும், மார்பிடை நீறு துதை**
**மாமலை மங்கை உமைசேர் சுவடும்”** என்றும் பாடிப் பரவுகிறார்.

**‘அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் ’** என்று திருக்களிற்றுப்கடியார் நயமாகப் பேசுகிறார். **‘மாதரங்கத் தன்னரங்கஞ் சேர்த்தி’, ‘உமைபாலுந் தன்பாலும் கண்டங்கரியன்’** என்று பெண்ணின் உருவத்தை தன் இடப் பாகத்தில் சேர்த்து என்றும் கபில தேவ நாயனார் சிவபெருமான் திருவந்தாதியில் போற்றுகின்றார்.

திருமாலைப் பாடிடும் நாலாயிரத்திவியபிரபந்தத்தில், மாதொருபாகனையும் ஆழ்வார்கள் பாடியுள்ளனர். **“மாதுதாங்கு கூறன்”(திருமழிசையார்), “வாசவார் குழலாள் மலைமங்கைதன் பங்கனை” (திருமங்கை மன்னன்), “மலைமகள் கூறன் ”(நம்மாழ்வார்), “கூற்று ஒருபால் மங்கையான்”(பொய்கையாழ்வார்)** இவ்விதம் இவர்கள் மட்டுமன்றி வைணவ இதிகாசங்களை கம்பராமாயணமும், வில்லிபுத்தூரரின் பெரும்பாரதமும் இறைவனை மங்கையோரு பங்கனாக போற்றுகின்றனர் .

**“உமைக்கு ஒரு பாகத்து ஒருவன்”, “நாரி ஒரு பாகத்தன்”, “வனிதையோர் கூறினான்”, “பஞ்சின் மெல்லடியாள் பாகன்”, தளிரியல் பாகத்தவன்”** என்று கவிச்சக்கரவர்த்தி கவினுறு சொல்லோவியமாம கம்பகாதையில் கயற்கண்ணிபங்காளனை போற்ற, வில்லியார் தாமும் சளைத்தவரல்ல என பற்பல இடங்களில் மடந்தை பாகனாக ஈசனை சுட்டி போற்றியுள்ளார். **“கருமயில் பாகன்”, “செய்யவாய் மரகதச் செல்வி பாகனே”, “தோகை பாகன்”, “அம்மையோடோரு கூறினான்”, “அரிவையோர் பாகன்”, “நாரிக்கொரு கூறினார்”** எனும் பெயர்களால் சுட்டியதோடு கொடு முடியாக அமையும் வண்ணம் இறைவனை “பொலம் பொற் கிரியில் மீதெழு மரகதக்கிரி’ போன்ற ஒளி மிகுந்த வடிவினை உடையதாக இக்கோலத்தைப் புகழ்ந்துரைக்கிறார்.

**‘அழலுறும் இரும்பின் மேனி மகிழ் மரகதம் பெணாகம் அயலணி சிவன்’** என்று அருணகிரியார் இவ்வடிவினைப் போற்றுகிறார். **‘மங்கையொரு கூறன்’** வடிவம் குறித்த விளக்கம் சாத்திரங்களிலும் காணப்படுகிறது. இறைவன் அம்மையப்பனாக விளங்குவதாலேயே உலகியல் வாழ்வு நடைபெறுகின்றது.

ஆணோ, பெண்ணோ தனியே இருக்கையில் வாழ்க்கை நிறைவுறுவதில்லை. மாறாக இணைவதின் போதே நிறைவுபெறுகிறது. முப்பாலினரும் ஒருவரையொருவர் மதித்து, சரிசமமாகவும், அன்புடனும், பூவுலகில் வாழ வேண்டும் என்றும், இன்றேல் பிரபஞ்சம் நிலைபெறாது என்ற ஆழ்ந்த தத்துவத்தை உணர்த்துவதே உமைபங்கர் வடிவம்.

குமரகுருபரர் இறைவனை ஆண், பெண் அலித்தன்மையன் ஆதலால், தாய் என்று போற்றி சிவசக்கியின் இணைப்பைக் காட்டுகிறார்.

**“ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவென்றால இவ்**
**உருவை இஃது ஒருத்தன் என்கோ? ஒருத்தி என்கோ ?**
**இருவருக்கும் உரித்தாக ஒருவர் என்றோர்**
**இயற்சொல் இலது எனின் யான் மற்று என்செய்கேனே ”**
**(சிதம்பர செய்யுட் கோவை)**

என கூறியமையை சிந்தித்து, பாகம் பெண்ணுரு ஆனவனை பாடிப்பரவி போற்றுவோம்.

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆனி நிறைமதி தென்னாடு வெளியீடு



மாணிக்கவாசகர் குருபூசை மற்றும் திருவாசக முற்றோதல்



ஆனி உத்தரம் ஆடல்வல்லானின் அருள்நீர் அருட்காட்சி



சிவத்திரு.ஆ.சி.பழனிவேல் அகவைநாள் கௌரவிப்பு
தலைவர் - அருள்மிகு தில்லைவெளி பிடாரி அம்பாள் திருக்கோயில்



தவத்திரு.அருளம்பலம் சுவாமிகள் குருபூசை



தமிழியின் ஆடிப்பிறப்பு தென்னாட்டில்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பத்தாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு" , சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு வண்பண்ணை தயா அச்சகத்தில் அச்சிடப்பட்டு கடக நல்லோரை ஆடித் திங்கள் 7ம் நாள் நிறைமதி அன்று (23-07-2021 வெள்ளிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொலைபேசி +94 21 221 2739 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org